# இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு

# இற்றைப்படுத்தப்பட்ட மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டம்

**(318 ஆம் இலக்கத் தோட்டம் , மாதம்பிட்டி கொழும்பு – 14 )**

**மார்ச்சு** - 2021

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்காக

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டது.

**அரும் பதங்கள்**

| | | |
|---|---|---|
| Asian Infrastructure Investment Bank | - | ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி |
| Affected Person | - | பாதிக்கப்பட்ட நபர் |
| Additional Project Director | - | மேலதிக திட்ட பணிப்பாளர் |
| Condominium Management Committee | - | அடுக்கு மாடி முகாமைத்துவ குழு |
| Department of Probation & Child Care Service | - | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் |
| Divisional Secretary | - | பிரதேச செயலகம் |
| Gender Based Violence | - | பாலினத்தினை அடிப்படையாக கொண்ட வன்முறை |
| General Certificate of Education | - | கல்வி பொதுச் சான்றிதழ் |
| Government of Sri Lanka | - | இலங்கை அசாங்கம் |
| Grievance Redress Mechanism | - | மனக்குறை தீர்க்கும் பொறிமுறை |
| Grievance Redress Committee | - | மனக்குறை தீர்க்கும் குழு |
| Household | - | வீட்டுடமை |
| Household Head | - | வீட்டுடமைத் தலைமை |
| Income Restoration Program | - | வருமான மீள்நிலைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் |
| Land Acquisition & Resettlement Survey (Inventory of Assets Survey) | - | காணி கையகப்படுத்தல் மற்றும் மீள்குடியமர்தல் கணக்கெடுப்பு (சொத்துக்களின் இருப்புக் கணக்கெடுப்பு) |
| Labor Force Participation Rate | - | தொழிற்படை பங்கேற்பு வீதம் |
| Metro Colombo Urban Development Project | - | பெருநகர் கொழும்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டம் |
| Ministry of Urban Development & Housing Facilities | - | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு |
| Medical Officer of Health | - | சுகாதார மருத்துவ அதிகாரி |
| National Child Protection Authority | - | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை |
| National Involuntary Resettlement Policy | - | தேசிய தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் திட்டம் |
| Project Affected Person | - | திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர் |
| Project Affected Household | - | திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டுடமைகள் |
| Project Director | - | திட்ட பணிப்பாளர் |
| Project Implementation Cell | - | திட்ட அமுலாக்கல் பரப்பெல்லை |
| Project Management Unit | - | திட்ட முகாமைத்துவ அலகு |
| Resettlement Action Plan | - | மீள்குடியமர்த்தல் திட்டம் |
| Resettlement Policy Framework | - | மீள்குடியமர்த்தல் கொள்ளைப் பணிச்சட்டகம் |
| Sexual Exploitation | - | பாலியல் சுரண்டல்கள் |
| Socio Economic Survey | - | சமூக பொருளாதார ஆய்வு |
| Social Services Department | - | சமூக சேவைகள் திணைக்களம் |
| Urban Development Authority | - | நகர அபிவிருத்தி அதிகார சபை |
| United Nations | - | ஐக்கிய நாடுகள் |
| Urban Regeneration Project | - | நகர மீளுருவாக்கல் திட்டம் |
| US Dollar | - | ஐக்கிய அமெரிக்க டொலர் |
| Women Development Committee | - | மகளிர் அபிவிருத்திக் குழு |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **நிறைவேற்றுச் சுருக்கம்** | 05 |
| 1. **அறிமுகம்** | 10 |
| 1.1 பின்னணி மற்றும் திட்ட விபரம் | 10 |
| 1.2 காணி கையகப்படுத்தல் மற்றும் மீள்குடியமர்த்தல் | 11 |
| 1.3 சட்ட பணிச்சட்டகம் | 14 |
| 1.4 செயன்முறையியல் | 16 |
| 1.5 சமூக.பொருளாதாரத் தாக்கம் | 18 |
| 1.6 சாத்தியமான சமூகப் பாதிப்புகள் | 18 |
| 1.7 வாழ்வாதாரம், பாடசாலை, நடமாட்டம், பாதுகாப்பு அணுகல் மீதான தாக்கம் | 19 |
| 1.8 சாதகமான தாக்கம் | 19 |
| 2. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டுடமைகளின் சமூக பொருளாதார விபரங்கள் | 20 |
| 3. தகுதி மற்றும் உரித்துக் கொள்கை | 25 |
| 3.1 கொள்கை மற்றும் சட்டப் பணிச்சட்டகம் | 25 3.2 |
| உரித்துக்களை கணிப்பீடுசெய்வதற்கான செயன்முறையியல் | 27 |
| 4 பங்குதாரர் சந்திப்பு மற்றும் தகவல் வெளிப்படுத்தல் | 33 |
| 5. மனக்குறை தீர்க்கும் பொறிமுறை பாலின செயல்திட்டம் | 38 |
| 6.நிறுவன ரீதியான ஏற்பாடுகள், கால அளவு மற்றும் செலவினம் | 43 |
| 7.நிறுவன ரீதியான ஏற்பாடுகள், கால அளவு மற்றும் செலவினம் | 45 |
| 8.கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் அறிக்கையிடல் | 49 |
| 9. பின்னணைப்பு 01- உரித்துத் தாயம் | 57 |
| 10. பின்னிணைப்பு 02 - இடிக்கப்பட வேண்டியுள்ள குடியிருப்பு கட்டமைப்புக்களை செற்பாடற்றதாக மாற்றல் | 59 |

## வரைபுகள்

படம் 1: சதுர அடியில் பாதிக்கப்பட்ட கட்டமைப்புகளின் அடிச்சுவடு..........................................9
படம் 2:மாதம்பிட்டி வீதியல் அமைந்துள்ள 318 ஆம் இலக்க தோட்டத்தின் உண்மையான அமைவிடம்........................................................................................................................13
படம் 3: கொழும்பு 15 இல் அமைபய் பெறவுள்ள ஹெலமுது செவண மற்றும் ஹேனமுல்லை மீள் குடியமர்த்தல் பகுதிகள...............................................................................................13
படம் 4: ஹெலமுது செவண மற்றும் 318 ஆம் தோட்டம் என்பனவற்றிற்கு இடையிலான வான் வழித் தூரம்...................................................................................................................14
படம் 5: குடியமர்த்தல் திட்டத்தின் தயார்படுத்தல் செயல்படிமுறை............................................16
படம்6 : 318 ஆம்தோட்டத்தில் ஒக்டோபர் 16 அன்று நடாத்தப்பட்ட திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலான ஆய்வு ..........................................................................................17
படம் 7: ஆண்டுகள் அடிப்படையிலான வாழ்கை செலவினம் -318 ஆம் இலக்க தோட்டம் .......20
படம் 08 சாத்தியமான வாழ்வாதாரப் பயிற்றசி வழங்குநர்களின் மேன்நோக்கு.........................30
படம் 09: 12.10.2018 அன்று 318 இல.தோட்டத்தில் பங்குதாரர் கலந்துரையாடல்.....................33

---

## அட்டவணைப் பட்டியல்

அட்டவணை 01. சமூக பொருளாதார நிலவரம்........................................................................09
அட்டவணை 2 : பாதிப்புக்கள் பற்றிய சுருக்கம்.......................................................................18
அட்டவணை 3: தளப் பகுதியில் தற்போது இயங்கும் நுண் வணிகங்களின் செயல் இழப்பு.......................19
அட்டவணை 4: கிடைப்பனவாகவுள்ள வசதிகள் மற்றும் வாய்ப்புக்களின் சுருக்கம்.................................21
அட்டவணை 5 : பாதிக்கப்பட்டவர்களை வயதுக் குழுக்கள், பாலின ரீதியான வகைப்படுத்தல்................22
அட்டவணை 6 பாதிக்கப்பட்டவர்களை வீட்டுடமை அங்கத்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வகைப்படுத்தல்.........................................................................................................22
அட்டவணை7 : பாதிக்கப்பட்ட வீட்டுடமை அங்கத்தவர்களை வயது, பாலின அடிப்படையில் வகைப்படுத்தல்.........................................................................................................22
அட்டவணை :8: பாதிக்கப்பட்ட வீட்டுடமைகளை இனத்துவ அடிப்டையில் பாலின ரீதியாக வகைப்படுத்தல்.........................................................................................................22
அட்டவண 9: பாதிக்கப்பட்ட வீட்டுடமைளின் கல்வி அடைவினை பாலின ரீதியாக வகைப்படுத்தல்......22
அட்டவணை 10: பிரிவுகள் அடிப்படையில் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய மக்களை வகைப்படுத்தல்...22
அட்டவணை11பாதிக்கப்பட்ட மக்களின் வருமான மூலங்களை பாலின அடிப்படையில் வகைப்படுத்தல் ..................................................................................................................22
அட்டவணை12:வருமாம் ஈட்டுபவரின் பாலினம், வருமான மட்டங்கள் ரீதியாக திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சராசரி மாதாந்த வரு-மானங்களைஅவகைப்படுத்தல் ...............................22
அட்டவணை13: தெரிவு செய்யப்பட்ட வகுதிகள் அடிப்படையில் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மாதாந்த செலவினத்தை வகைப்படுத்தல். .........................................................23
அட்டவணை14: வீட்டுடமைச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு ...............................................23
அட்டவணை15: பல்லாண்டு கால தாவரங்களின் பாதிப்பு நிலை .......................................................23
அட்டவணை16 விரிவான உரித்து தாயம் .............................................................................................26
அட்டவணை 17 பங்குதாரர் தகவல் வெளிப்படுத்தல் கூட்டத்தில் பெறப்பட்ட தகவல்கல் பின்னாட்டல்களின் சுருக்கம் ..............................................................................................34
அட்டவணை 18 விரிவான உரித்து தாயம் ..........................................................................................37
அட்டவணை 19 மனக்குறை தீர்க்கும் பொறிமுறையின் கட்டமைப்பு ,தொழிற்பாடு என்பனவற்றின் பொழிப்பு .........................................................................................................................40
அட்டவணை 20 ஆகஸ்ட் 2020 நிலவரப்படி மீ.குசெ.தி செயல்பாட்டின் புதுப்பிக்கப்பட்ட காலவரிசை...41
அட்டவணை 21 உள்ளக கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமை ....................................................48
அட்டவணை 22: கண்காணிப்பு குறிகாட்டிகள் ......................................................................................49
அட்டவணை 23 வாழ்வாதார மறுசீரமைப்பு உதவி .................................,........................................53

## நிறைவேற்று சுருக்கம்

இலங்கையின் வர்த்தகத் தலைநகரமாக கொழும்பு காணப்படுவதோடு மாத்திரமல்லாது, நாட்டின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதில் சுமார் 68,000 குடும்பங்கள் சுமார் 1500 க்கும் மேற்பட்ட பின்தங்கிய குடியிருப்புகளில் வாழ்வதாக 2011 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வுகள் குறிப்பிடுகின்றனர். இது நகரத்தின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 50 சதவீதமாகும். மோசமான வீட்டு வசதி மற்றும் சேவைகள் மற்றும் வினைத்திறனற்ற நிலப் பயன்பாடு போன்றவற்றிற்கு தீர்வு காண்பதற்காக இலங்கை அரசு கொழும்பு நகர மீளுருவாக்கல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய உயர் அடுக்குமாடி கட்டடங்களில் உள்ள தகுதியற்ற குடியிருப்புக்களில் தற்போது வசித்து வருகின்ற சுமார் 50,000 குறைந்த வருமானம் மற்றும் குறைந்த, நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கு இது ஏற்பாடுசெய்கின்றது. இவ்வாறு சேமிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிலம் நகர்புற உட்கட்டமைப்பு அல்லது பூங்காக்கள் போன்ற பொது நோக்கங்களுக்காகவும் மற்றும் அதிக பெறுமதிமிக்க மீள் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்தப்பட உள்ளது.

கொழும்பு நகர மீளுருவாக்கல் திட்டத்தின் (திட்டம்) உதவியின் கீழ் முழு உள்கட்டமைப்பு வசதிகளுடன் எட்டு அல்லது ஒன்பது குடியிருப்பு வளாகங்களில் உள்ள பல அடுக்குமாடி கட்டடங்களில் புதிதாக கட்டப்பட்ட அலகுகளில் சுமார் 5,500 குடும்பங்களை குடியமர்த்துவதற்கு உதவி புரிவதற்கு ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி முடிவு செய்துள்ளது. இந்த பகுதிகளில் பொது வசதிகளை வழங்குதல் உட்பட மீள்குடியமர்த்தல் திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற இடங்கள் மீள் அபிவிருத்தி செய்யப்படும். தொடர்புடைய கொள்கை மற்றும் முறைமை மேம்பாடுகளுடன் மீள் அபிவிருத்தி செய்வதில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் குறைந்த வருமானம் கொண்ட சமூகங்களின் வீட்டு நிலைமைகளை மேம்படுத்துவதும், கொழும்பில் நில பயன்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதும் இந்த திட்டத்தின் நோக்கங்களாகும். கொழும்பிலுள்ள மாதம்பிட்டி வீதியில் அமைந்துள்ள 318 ஆம் இலக்க பிர சத்தினையும் மேற்குறித்த நகர மீளுருவாக்கல் திட்டத்தின் கீழ் மீள் அபிவிருத்திக்காக அடையான் காணப்பட்டுள்ளதோடுஅபிவி ,ருத்திக்காக ஒதுக்கப்பட்ட இப் பிரதேசமானது. அபிவிருத்தி நோக்கங்களுக்காக நிலத்தை விடுவிப்பதற்காக, திட்டப் பகுதியின் எல்லைக்குள் வாழுகின்ற குடும்பங்களை மீள்குடியமர்துதல் வேண்டும்.

திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள்குடியமர்த்தும் திட்டமானது, இலங்கை அரசாங்கத்தின் காணி கையகப்படுத்தல் சட்டம், அரச சொத்துக்களின் உடமையினை மீளப்பெறல் சட்டத்தின் 7 ஆம் பிரிவு, தேசிய தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் திட்டம் மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கட்டமைப்பு, குறிப்பாக, சுற்றுச்சூழல் மற்றும் சமூக தரநிலை 2 மற்றும் தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் என்பவற்றிற்கு அமைவாக தயார்படுத்தப்பட்டு வெளியிடப்படும். தகைமைப் பிரமாணங்கள்,பிரதிபலன்கள், நடைமுறைகள் மற்றும் திட்டத்தின் மீள்குடியமர்த்தல் கூறுகளுக்கான நியமங்கள் உள்ளிட்ட ஒட்டு மொத்த செயல் முறையும்,இந்த கொள்கைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட மீள்குடியமர்த்தல் கொள்கை கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும். மீள்குடியமர்த்தல் கொள்கைப் பணிச் சட்டக கட்டமைப்பின் தேவைக்கேற்ப, மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் உரிமைகள், மக்களின் வருமானம் மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு மூலோபாயம், நிறுவன ரீதியான ஏற்பாடுகள், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல், செலவினம் மற்றும் கால வரையறையினுள் நடை முறைப்படுத்தல் திட்டம் என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தனிப்பட்ட மீள்குடியமர்த்தல் திட்டத்தின் நோக்கம் செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட அணுகுமுறை, செயல்முறைகள், பொறுப்புக்கள், இழப்பீட்டு உரிமைகளை மேம்படுத்தல் அல்லது குறைந்தபட்சம் மீட்டமைத்தல்,பொதுவாக திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் குறிப்பாக, பௌதீக ரீதியான மீள்குடியமர்த்தல் என்பனவற்றினைத் தாபிப்பதாகும். அவை உண்மையான நிலஉடமை, இடம்பெயர்வு ,பாதிப்புக்களின் தன்மை தொடர்பான தகவல்களை வழங்கல், மீள்குடியமர்த்தலால் பாதிக்கப்பட்ட அனைத்து நபர்களையும் அடையாளம் காணல் என்பன இதன் ஏனைய செயற்பாடுகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்டத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான மீள்குடியமர்த்தல் திட்டமானது, இலங்கை அரசாங்கத்தின் காணி கையகப்படுத்துதல் சட்டம், அரச சொத்துக்கள் மீளுடமைமீட்புச் சட்ட இல 7, தேசிய தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் கொள்கை மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச்சூழல் கட்டமைப்பு மற்றும் தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் தொடர்பிலான சமூக இணக்கப்பாடு குறிப்பாக,சுற்றுச்சூழல் மற்றும் சமூக தரநிலை 2 தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் சட்டம் என்பனவற்றிற்கு அமைய தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. திட்டத்தின் குடியமர்த்தல்க் கூறுகளுக்கான தகைமை பிரமாணங்கள், பிரதிபலன்கள், நடைமுறைகள் மற்றும் தரநிலைகள் உட்பட ஒட்டுமொத்த செயன்முறையும் இக்கொள்கைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட குடியமர்த்தல்க் கொள்கை கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குடியமர்த்தல்ப்பட்ட குடும்பங்களின் உரிமைகள், மக்களின் வருமானம் மற்றும் வாழ்வாதார மறு சீரமைப்பு மூலோபாயம், நிறுவன ரீதியான ஏற்பாடுகள், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் கட்டமைப்பு, வரவுசெலவுத் திட்டம் மற்றும் நேரத்திற்குட்பட்ட செயற்பாட்டு அட்டவணை என்பன மீள்குடியமர்த்தல் செயற்பாட்டு பணிச்சட்டகத்தின் தேவைக்கேற்ப, விரிவாக குடியமர்த்தல் திட்டம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு தனிப்பட்ட மீள்குடியமர்த்தல் பணிச்சட்டகமானது, திட்டத்தின் திட்டமிடப்பட்ட அணுகுமுறை , பொறுப்புக்கள் என்பன அவர்களின் உண்மையான நில உடைமை, இடப் பெயர்வின்தன்மை மற்றும் குடியமர்த்தல்த்தால் பாதிக்கப்பட்ட அனைத்து நபர்களையும் அடையாளம் காணல் என்பன ஏனைய நடவடிக்கைகளாகும்.

மாதம்பிட்டி பிரதேசத்திற்கான முதலாவது செயற்பாட்டுத் திட்டத்தின் முதல் வரைவு 2019 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் தயாரிக்கப்பட்டு ,2019 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் வெளியிடப்பட்டதோடு, பங்குதாரர்களின் தொடர்ச்சியான ஒரு வருடகால ஈடுபாட்டின் விளைவாக புதிதாக பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதத்தில் மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டத்துடன் கூட்டிணைப்பதற்கான தேவையினை ஏற்படுத்தி இருந்தது . மீள்குடியமர்த்தப்பட வேண்டியிருந்த மக்களுடனான முறைசாரா நேர்காணல்கள் , பொது சனத்திற்கான பட்டறைகள் மற்றும் புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடி வளாகங்களுக்கு சென்று அவற்றினைப் பார்வையிடுவதற்கான வாய்ப்புக்கள் என்பன மேற்குறித்த இற்றைப்படுத்தல்களில் உள்ளடக்கிக் காணப்பட்டன . வெட்டுத் திகதியானது , 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் 10 ஆம் திகதி என மாற்றமுறாது காணப்பட்டது. இது குடிசனத்தொகைக் கணக்கெடுப்பிற்கான ஆரம்ப திகதியாக காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக12 குடும்பங்கள் பற்றிய தகவல்களும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டத்துடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டு வேறிடப்படுத்தப்பட வேண்டியுள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 72 என கணக்கிடப்பட்டது. 2020ஆம் ஆண்டு ஓகத்து மாத மீள்குடியமர்த்த்தல் செயற்பாட்டுத் திட்ட அமுலாக்கமானது 2021 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 24 ஆம் திகதி வரையில் தொடர்ந்தது. இருப்பினும், வேறிடப்படலினைத் தெரிவுசெய்யாத கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட 72 பேர்களிலிருந்து 11 பேரை தவிர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது . அதன்படி மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டமானது, திருத்தியமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. திருத்தப்பட்ட இந்த மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டமானது, (மார்ச், 2021), 2020 ஓகத்து மாதத்தில் தயாரிக்கப்பட்ட இற்றைப்படுத்தப்பட்ட மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டத்திற்கான திருத்தங்களை

அறிமுகப்படுத்துகிறது. இது கொழும்பு மாதம்பிட்டியிலுள்ள 318 ஆம் இலக்கத் தோட்டத்தில் வசிக்கின்ற 72 கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டுடமைகளின் குடியமர்த்தல்த்தில் கவனம் செலுத்தியது. குறித்த 72 பேர்களில், 61 பேர் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கு இடம்பெயர தங்கள் ஒப்புதல்களை அளித்தனர். அவர்களில் சிலர் (23 குடும்பங்கள்) ஏற்கனவேகுறித்த குடியிருப்புகளுக்கும் குடிபெயர்ந்துள்ளதோடு, மீதமுள்ள 38 பேர் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு குறித்த,குடியிருப்புகளுக்கு இடம்பெயருவதற்கும் தம்மைதயார்படுத்திக் கொண்டிருக்கின்றனர். எவ்வாறாயினும், மீதமுள்ள 11 குடும்பங்கள் தமது இடமாற்றத்திற்கு கடுமையான ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளதோடு, அதிக இழப்பீடு அல்லது மாற்றுக் குடியிருப்புகளையும் கோரியுள்ளனர். நகர்ப்புற மீளுருவாக்கல் திட்டக் கொள்கையின் பிரகாரம், இந்த 11வீட்டுடமைகளின் கோரிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிறைவேற்ற முடியாதுள்ளது. எனவே , ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியுடன் கலந்தாலோசித்து 11 வீட்டுடமைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளைத் திட்டத்தின் நோக்கெல்லையிலிருந்து தவிர்த்து, அடுக்குமாடி கட்டுமானப்பணிகளை எளிதாக்குவதற்காக அவர்கள் ஆக்கிரமித்துள்ள பகுதியை வேறாக்கல் போன்ற முடிவுகளும் எடுக்கப்பட்டன. ஒப்பந்தக்காரர் கட்டுமானபணிகள் இந்த தடுப்புக் குடும்பங்களை மோசமாகப்பாதிக்காது என்பதையும், எந்தவொரு இடர்வினையும் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு போதுமான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரரின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டத்தில் கூட்டிணைக்கப்படுவதை திட்டமுகாமைத்துவ அலகு உறுதிசெய்யும். அதன்படி, 61 குடும்பங்களின் குடியமர்த்தல் செயல் முறையில் கவனம் செலுத்துவதற்காக மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டம் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கருத்திட்ட முகாமைத்துவ அலகானது குறித்த,11 குடும்பங்களுடன் அவர்களின் வேறிடப்படல் மற்றும் குடியமர்த்தல்த்தைத் தெரிவுசெய்தல் என்னவற்றிற்கு வசதியாக, அதன் ஆலோசனைகளையும் பேச்சுவார்த்தைகளையும் தொடருகிறது. அதற்கமைய, குறித்த 11 குடும்பங்கள் பிற்காலத்தில் இடமாற்றத்திற்கு முன்ஒப்புதல் அளிப்பின், அவர்கள் திட்டத்தின் மீள்குடியமர்த்தல் திட்டத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட முடியும் என்பதோடு மாத்திரமல்லாது, மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மீள்குடியமர்த்தல் கொள்கையின் உரிமைத் தாயத்திலுள்ள விதிகளின் பிரகாரம் ஈடுசெய்யப்படும். அதற்கமைய ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது திருத்தப்பட்ட இந்த மீள்குடியமர்த்தலினை அதற்கேற்ப இற்றைப்படுத்தும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, திருத்தப்பட்ட இந்த மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டமானது, கொழும்பு மாதம்பிட்டியில் அமைந்துள்ள 318 ஆம் தோட்டத்தில் அமைந்துள்ள 61 வீடுகளின் மீள்குடியமர்த்தல் தொடர்பில் கவனம் செலுத்துகிறது. ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவி திட்டத்தின் கீழ் மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டத்தின் சுற்றுச் சூழல் மற்றும் சமூகப் பணிச் சட்டகம், சுற்றுச் சூழல் மற்றும் சமூக தரநிலை 2 என்பனவற்றிற்கு இணங்க இந்த 61 குடும்பங்களும் மீள்குடியமர்த்தப்படும். மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் செயல்படுத்தல் மற்றும் செலவுகள், இழப்பீடு மற்றும் நிர்வாகச் செலவு உட்பட, திட்டச் செலவின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்படுவதோடு, மேலும் இது இலங்கை அரசாங்கத்தின் ஓர் எதிர்கணிய நிதியாக வழங்கப்படுகின்றது. மீள்குடியமர்த்தல் கூறு ரூபா *2,875,950* (அடுக்கு மாடி கட்டிடங்களின் கட்டுமானம் நீங்கலாக) ஆக காணப்டுவதோடு, இது 2021 இன் ஐ .அ டொ .14,454.18 இற்கு சமமான தொகையாகும்.

மேற்குறித்த மீள்குடியமர்த்தல் செயற்திட்டத்தின் முதலாம் அத்தியாயமானது, மீள்குடியமர்த்தல் திட்டத்தின் பின்னணியை அறிமுகப்படுத்துகிறது. காணி கையகப்படுத்துதல், அதனோடு

தொடர்புடைய பாதிப்புகள் ,கருத்திட்ட அமுலாக்கம் காரணமாக பாதிப்புக்குள்ளாகும் மக்களை மீள குடியமர்த்துவதற்காக முன்மொழியப்பட்ட இடம் மற்றும் சமூகம் தொடர்பிலான தரவு சேகரிப்புமுறை தொடர்பான அடிப்படை தகவல்கள் என்பனவற்றினை வழங்குகிறது. இரண்டாவது அத்தியாயம் வாழ்வாதாரநிலை, நில பயன்பாட்டு அளவு, வீட்டுபருமன், வீட்டுச்சொத்துகள், வசதிகள், தகுதி பாலினம் வகைப்படுத்தல் மற்றும் திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சமூக, பொருளாதார குடிசனப் புள்ளிவிபரங்கள் மற்றும் உரித்துரிமை பற்றியும் மூன்றாவது அத்தியாயமானது, வாழ்வாதாரங்கள்,வருமான மூலங்கள், கணக்கீட்டு முறைகள் மற்றும் எதிர்மறையான சமூக பாதிப்புகளை நிவர்த்திசெய்ய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை விவரிக்கும் உரித்துத் தாயம் பற்றியும் முன்வைக்கிறது. நான்காம் அத்தியாயம் பங்குதாரர்களின் ஈடுபாடு மற்றும் தகவல் வெளிப்பாடு, பொது ஆலோசனைகள் பற்றிய தகவல்கள், கருத்துக்களை சுருக்கமாகக் கூறுகிறது. அத்தியாயம் ஐந்து குறைகளை நிவர்த்திசெய்யும் முறை மற்றும் பல்வேறு அடுக்குகள் மற்றும் பின்பற்ற வேண்டிய செயல்முறை பற்றி விளக்குகிறது. அத்தியாயம் ஆறானது, பாலின செயல்திட்டம், பெண்கள் மீதான தாக்கங்கள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை விவரிக்கிறது. அத்தியாயம் ஏழு ஆனது, நிறுவன ஏற்பாடுகள், கால வரிசை மற்றும் மீள்குடியமர்த்தல் வரவுசெலவு ஆகியவற்றை விபரிக்கிறது. இறுதி அத்தியாயமானது, உள்ளக மற்றும் வெளியக கண்காணிப்பு, பயன்படுத்த வேண்டிய குறிகாட்டிகள் மற்றும் அறிக்கையிடல் தேவைகள் என்பனவற்றினை குறிப்பிடுகின்றது. அட்டவணை1 திட்டத்தின் மீள்குடியமர்த்தல் தாக்கங்களை சுருக்கமாக குறிப்பிடுவதோடு, அவை அத்தியாயம் 2 இல் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

திட்ட குடியமர்த்தல்த்தின் தாக்கத்தின் சுருக்கம் அட்டவணை இல.1 இல் விபரிக்கப்பட்டுள்ளதோடு, அது தொடர்பிலான விரிவான அறிமுகம் அத்தியாயம் 2 இல் கொடுக்கப்பட்டுள்ளது. வேறிடப்படல் மற்றும் மீள்குடியமர்த்தல் செயல்முறையின் தாக்கம் குடியிருப்பு கட்டிடங்கள் இழப்பு, வணிக கட்டிடங்கள் இழப்பு, வாழ்வாதாரம் இழப்பு மற்றும் தற்போதைய வேலை இழப்பு காரணமாக ஏற்பட்ட தற்காலிக வருமான இழப்பு என்பன இதில்அடங்கும்.

**அட்டவணை 01. சமூக பொருளாதார நிலவரம்**

| பாதிப்பு வகை | பாதிப்பு பற்றிய விளக்கம் |
|---|---|
| திட்டத்தினால்பாதிக்கப்பட்டமீள்குடியமர்த்தப்படவுள்ளவீட்டுடமைகளின் எண். | 61 |
| இடிக்கப்பட வேண்டியுள்ளபாதிக்கப்பட்டகுடியிருப்புக்கட்டமைப்புக்கள் | 61 |
| பாதிக்கப்பட்ட வணிகங்கள் | 04 |
| பாதிக்கப்பட்டகட்டமைப்புக்களின்[1]தளப் பரப்பு | 500 சதுர அடியினை மேற்படாதவை- 40<br>501-1000சதுர அடிக்கும் இடையிலானவை- 17<br>1000 சதுர அடிக்கு மேற்பட்டவை - 04 |
| இலகுவில் பாதிக்கப்படக் கூடிய வணிகங்கள் | 07 |

*அட்டவணை பாதிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் கட்டமைப்புக்கள் 1*

அடையாளங் காணப்பட்ட தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு , இற்றைப்படுத்தப்பட்ட உரிமை தாயம் உருவாக்கப்பட்டுள்ளதோடு, 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாத மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான நிறுவன ரீதியான பணிச் சட்டகம் மாற்றமுறாது நிலையாக காணப்படுவதோடு,மேம்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி திட்டத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் வருகின்ற நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழான கருத்திட்ட முகாமைத்துவ அலகின் கீழ் வருகின்றது.

[1]பாதிக்கப்பட்ட கட்டமைப்புக்களின் தறைப் பரப்புதொடர்பிலான விபரத்தினை பின்னிணைப்பு 02 வழங்குகிறது.




வரைபு 1: சதுர அடியில் பாதிக்கப்பட்ட கட்டமைப்புகளின் அடிச்சுவடு

# 1 அறிமுகம்

## 1.1பின்னணி மற்றும் திட்ட விபரம்;

1960 களின் பிற்பகுதியிலிருந்து ,இலங்கை அரசு தொடர்ச்சியான பாரிய வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்த திட்டங்கள் அரச துறை பணியாளர்களுக்கு வீட்டு வசதிகளையும் ,பிற குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு சிறிய வீட்டு வசதிகளையும் நிதி உதவிகளையும் வழங்கியுள்ளது. இந்த திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வீட்டு அலகுகள் மற்றும் தயார்படுத்தப்பட்ட இடங்கள் கொழும்பு நகர்புறத்தில் உள்ள வீட்டு பகுதிகளில் அரைவாசிக்கு மேலானவை என மதிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் , உள்நாட்டு மோதல் காலத்தில் ,வீட்டு வசதி விநியோகத்தை விரிவாக்குவதற்கு அல்லது ஏற்கனவே அபிவிருத்திசெய்யப்பட்ட குடியிருப்பு பகுதிகளுக்கு முழு உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தேவையான முதலீடுகளை அரசாங்கத்தால் தக்கவைக்க முடியவில்லை. இதன் விளைவாக ,பல புதிய குடியிருப்புக்கள் போதிய உள்கட்டமைப்பு அல்லது அனுமதி இன்றி உருவாகின .மேலும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட பல குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை நகர்புற உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் குறைபாடாக இருந்தது. 2011ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் சுமார் 68,00 குடும்பங்கள் 1,500 இற்கு மேற்பட்ட தகுதியற்ற குடியிருப்புக்களில் வசித்து வருவதாக இலங்கை அரசு மதிப்பிட்டுள்ளது .இது கொழும்பு நகரத்தின் மக்கள் தொகையில் சுமார் 50 சதவீதமாகும்.

உள்கட்டமைப்பு மற்றும் சேவை சவால்களுக்கு மேலதிகமாக ,முன்னைய வீட்டுத் திட்டங்களால் விடப்பட்ட மற்றொரு கடுமையான சுமை நகரத்தின் நிலமானது சிறிய நிலத் துண்டுகளில் பெரும்பாலும் ஒன்று மற்றும் இரண்டு மாடி வீடுகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனை மீள் அபிவிருத்தி செய்வதுகடினம் மேலும் இது நகரத்தின் செலவு சிக்கனத்திற்கு தடையாக உள்ளது. இதன் விளைவாக ,அபிவிருத்தி அல்லது மறு அபிவிருத்திக்கு கிடைக்கக்கூடிய நிலப்பகுதிகள் பற்றாக்குறையாகவும் மிகவும் உயர்ந்தவையாகவும் உள்ளது .இது சிறியதாக இருப்பினும் ,மிக உயர் மதிப்புள்ள வணிக அபிவிருத்திகள் நடைபெற அனுமதிக்கிறது. இது பெரும்பாலான நகர்புற அபிவிருத்தி செயல்பாடுகளை மூன்று முக்கிய மாநகரசபை பகுதிகளுக்கு வெளியே உள்ள பகுதிகளுக்கு தள்ளியுள்ளது. இது சுற்றுச் சூழல் மற்றும் போக்குவரத்து செலவினங்களின் அதிகரிப்புடன் பண்ணைகள் மற்றும் காடுகளிற்குள் நகர் பறபகுதிகளின் விரைவான பௌதீக விரிவாக்கத்திற்கு வழிவகுக்கின்றது.

தரமற்ற வீட்டு வசதிகள் மற்றும் சேவைகள் மற்றும் வினைத்திறனற்ற நிலப் பயன்பாடு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக நகர மீளுருவாக்கல் திட்டத்தை இலங்கை அரசுநிறுவியுள்ளது. இந்த திட்டம் தகுதியற்ற குடியிருப்புக்களில் தற்போது வசித்துவருகின்ற குறைந்த மற்றும் குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட சுமார் 50,000 குடும்பங்களை மீள்குடியேற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது .அவை முன்னர் இலங்கை அரசால் வழங்கப்பட்டவை அல்லது சட்ட ரீதியற்ற முறையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன .மேலும் குறைபாடுடைய உள்கட்டமைப்பு ,சேவை மற்றும் வீட்டுவசதி ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு சேமிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிலம் நகர உள்கட்டமைப்பு அல்லது பூங்காக்கள் போன்ற பொது

நோக்கங்களுக்காகவும் அதிக மதிப்புள்ள மீள் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்தப்பட உள்ளது. தகுதியற்ற குடியிருப்புக்கள் ஏறத்தாழ 900 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது . அவற்றில் 300 ஏக்கர் விடுவிக்கப்பட்டதும் மொத்தம் 50,000 புதிய வீட்டு அலகுகளை நிர்மாணிக்க பயன்படுத்தப்படும். 450 ஏக்கர் வணிக நோக்கங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள 150 ஏக்கர் பொது திறந்த வெளி மற்றும் பிற முக்கிய நகர உள்கட்டமைப்புக்களுக்காக பராமரிக்கப்படும்.

கீழே குறிப்பிட்டுள்ளபடி தொழில் நுட்ப வடிவமைப் குடியமர்த்தல்ம் மற்றும் குடியமர்த்தல்த்திற்கு பின்னரான கொள்கையில் மேம்பாடுகள் ,வீட்டுபராமரிப்பு ஏற்பாடுகள் , மீள்அபிவிருத்தி அணுகுமுறையில் புத்தாக்கம் மற்றும் வீட்டுவசதிகளில் பொதுமக்கள் தலையீட்டின் நீண்ட காலநிலை பேறுதன்மையை மதிப்பாய்வுசெய்தல் போன்ற குறிப்பிடத்தக்க மேம்பாடுகளுடன் நகரமீளுருவாக்கல் திட்டத்தின் கட்டம் - iii இனை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி முதலீட்டு வங்கி இணங்கியுள்ளது:

**பகுதி 1**: **வீட்டு நிர்மாணம் -**முழு உள்கட்டமைப்பு வசதிகளுடன் எட்டு அல்லது ஒன்பது குடியிருப்பு வளாகங்களில் (துணைத்திட்டங்கள்) பல அடுக்கு மாடிகட்டடங்களில் சுமார் 5,500 வீட்டு அலகுகளை நிர்மாணிக்க இந்த பகுதி உதவும். இந்த பகுதிக்கான ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதி உதவி 153 மில்லியன் அமெரிக்க டொலர்கள்ஆகும்.

**பகுதி 2: நில மீள்அபிவிருத்தி** -நகர மீளுருவாக்கல் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட புதிய அடுக்குமாடி அலகுகளுக்குள் தகுதியற்ற குடியிருப்புக்களிலுள்ள குடும்பங்கள் சென்றபின் , கிடைக்கக்கூடிய அல்லது கிடைக்கும் நிலத்திலிருந்தான வருமானத்தை இந்த பகுதி அதிகரிக்கும். இந்த பகுதிக்கான ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதி உதவி 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

**பகுதி 3: தொழில் நுட்ப உதவி மற்றும் திட்ட முகாமைத்துவம் -** நகர மீளுருவாக்கல் திட்டத்தின் செயல்படுத்தலை மேம்படுத்த திட்ட முகாமைத்துவம் மற்றும் பிற தர மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு இந்த பகுதி உதவிபுரியும். இந்த பகுதிக்கான ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதி உதவி 6 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

## 1.2 திட்டத்திற்கான காணி கையகப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் பாதிப்புக்கள்

கொழும்பு மாதம்பிட்டி வீதியில் அமைந்துள்ள 318 ஆம் தோட்ட மீள் அபிவிருத்திக்காக திட்டத்தால் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகும். அடுக்கு மாடிக் குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்காக திட்டத்தால் மொத்தமாக 4 ஏக்கர் நிலப்பரப்பு பயன்படுத்தப்படும். அரசுக்கு சொந்தமான இந்த நிலம் தற்போது தமது நிலத்திற்கு சட்ட பூர்வமான உரிமைகள் இல்லாத வசிக்கும் இரவற் குடியிருப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த சட்ட விரோதவீடுகளில் இருந்து நிலத்தை மீட்க வேண்டியுள்ளது. நிலத்தின் தற்போதைய குடியிருப்பாளர்கள் தங்கள் நிலத்திற்கு எந்த சட்ட உரிமையும் வைத்திராததால் தன்னிச்சையற்ற காணி கையகபடபடுத்தல் இங்கு காணப்படமாட்டாது . அதற்கு மாறாக, அவர்களின் காணியினை மீட்டெடுப்பதன் மூலம் இடம் பெயரும் வீடுகளுக்கு இந்த திட்டம் மாற்று வீடுகளை வழங்கும் .

திட்டத்தால் பாதிக்கப்பட்ட 72 குடும்பங்களை ஒட்டு மொத்தமாக மீள்குடியமர்த்துவது அவசியமாகும். அதற்கமைய , இத்திட்டத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்காக தற்போதைய குடியிருப்பு வளாகத்திற்கு உடனடுத்து, சுமார் 750 மீட்டர் வான்வழி அல்லது 950 மீற்றர் (கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் ) நடைதூரம் தொலைவிலுள்ள ஹேனேமுல்லைப் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஹெலமுத்து செவன வீட்டுத்திட்டம் மற்றும் அதனை அண்டிய மிஹிஜயா செவான மற்றும் ரண்மிதுசெவன ஆகிய

அடுக்கு மாடிக் குடியிருப்புத் திட்டங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிருமாணிக்கப்பட்டது .குறித்த அடுக்கு மாடிகள்.15 மாடிகள் மற்றும் 3,300 குடியிருப்புத் தொகுதிகள் என்பனவற்றினை கொண்டமைந்திருந்ததோடு, மின் சோபாக்கள், அவசர நிலையின் போதான வெளியேறல் வாயல்கள் பொது வரவேற்பறைகள் உள்ளடங்கலாக நவீன வசதிகளுடன் நிருமாணிக்கப்பட்டுள்ளது. கீழே வந்துள்ள 1 மற்றும் 2 புள்ளிவிபரங்கள் முறையே மாதம்பிட்டி 318 ஆம் தோட்டம் மற்றும் புதிய மீள்குடியமர்த்தல் மையம் என்பனவற்றினைக் காட்டுகின்றன. இரண்டு இடங்களுக்கிடையேயான வான்வழி தூரம் படம்3 இல் காட்டப்பட்டுள்ளது.

திட்டத்தினால் பாதிக்கப்பட்ட 72 வீட்டுடமைகளில், 61 வீட்டுடமைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஒதுக்கப்பட்ட அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் இடம்பெயர ஒப்புக் கொண்டனர். அவர்களில் சிலர் (23 வீட்டுடமைகள்) ஏற்கனவே அந்தந்த குடியிருப்புகளுக்கும் குடிபெயர்ந்துள்ளனர். எஞ்சிய 38 வீட்டுடமைகள், நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு, அதன் குடியிருப்புக்களுக்கு நகருவதற்கும் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். எவ்வாறாயினும், மீதமுள்ள 11 வீட்டுடமைகள் தமது இடமாற்றத்திற்கு கடுமையாக ஆட்சேபனையினைத் தெரிவித்ததோடு, அதிக இழப்பீடு அல்லது மேலதிக குடியிருப்பொன்றினையும் கோரினர். நகர்ப் புறமீளுருவாக்கம் திட்டக் கொள்கையின் பிரகாரம் இந்த 11 வீடுகளின் கோரிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிறைவேற்ற முடியாதுள்ளது. எனவே, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியுடன் கலந்தாலோசித்து, 11 வீடுகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை திட்டத்தின் நோக்கத்திலிருந்து விலக்குவது மற்றும் அடுக்கு மாடிக் கட்டுமானப் பணிகளை எளிதாக்குவதற்காக அவர்கள் ஆக்கிரமித்துள்ள பகுதியைத் தடுப்பது போன்ற முடிவுகளும் எடுக்கப்பட்டன. திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் ஒப்பந்தக்காரர் கட்டுமான பணிகள் இந்த தடுப்புக் குடும்பங்களை மோசமாகப் பாதிக்காது என்பதையும், இந்த 11 வீட்டுடமைகளில் எந்தவொரு பாதகமான தாக்கத்தினை அல்லது இடர்வினைத் தவிர்க்க அல்லது குறைக்க போதுமான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரரின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதனை உறுதிசெய்யும். அதன்படி ,61 குடியிருப்புகளுக்கு மட்டுமே குடியமர்த்தல்ம் தேவைப்படுகிறது. மேலும், இந்த திருத்தப்பட்ட மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டம் குடியமர்த்தல் நடைமுறைகளை முன்னெடுப்பதற்கு வழிகாட்டும்.

எவ்வாறாயினும், வேறிடம் செல்லல் அல்லது மீள்குடியமரலினைத் தேர்ந்தெடுப்பதனை ஊக்குவிப்பதற்காக கருத்திட்ட முகாமைத்துவ அலகானது, வேறிடம் செல்ல மறுத்த 11 வீட்டுடமைகளுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும். பிற்கால கட்டத்திலும் வேறிடப்படுவதற்கு முன்னரும்11வீட்டுடமைகள் ஒப்புதல் அளிக்கப்படின், அவர்கள் திட்டத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கப்படுவர் .மேலும் மீள்குடியமர்த்தல் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மீள்குடியமர்த்தல் கொள்கை என்பன உரிமைத் தாயத்திலுள்ள விதிகளின் படி நட்ட ஈடு வழங்கப்படும். ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியி ன்இத்தகைய திருத்தப்பட்ட மீள்குடியமரல் செயற்பாட்டுத் திட்டம், அதற்கேற்ப இற்றைப்படுத்தப்படும்.




*படம் 2 - மாதம்பிட்டிய வீதியல் அமைந்துள்ள 318 ஆம் இலக்க தோட்டத்தின் உண்மையான அமைவிடம்*




*படம் 3 -கொழும்பு 15 இல் அமைபய் பெறவுள்ள ஹெலமுது செவண மற்றும் ஹேனமுல்லை மீள் குடியமர்த்தல் பகுதிகள்*




படம் 4 ஹெலமுது செவண மற்றும் 318 ஆம் தோட்டம் என்பனவற்றிற்கு இடையிலான வான் வழித் தூரம்

## 1.3 சட்டப் பணிச்சட்டகம்

முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து நடவடிக்கைகளும் குடியமர்த்தல் நடவடிக்கைகளுக்கு பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவித்தல்களுடன் இணங்கியதாக இருக்கும். காணி கையகப்படுத்தல், அரச நிலங்களை மீட்பது, சொத்து இழப்பீடுகளுக்கான நட்ட ஈடு மற்றும் இலங்கையில் மேம்படுத்தல்களுக்கான இழப்பீடு போன்ற காணி சம்பந்தமான தற்போதைய இலங்கை அரசின் நிர்வாக விடயங்கள் பல சட்ட வாக்க சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன:

**1950 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க காணி கையகப்படுத்தல் சட்டம் -** பொது நோக்கங்களுக்காக காணி கையகப்படுத்துவதற்கு வழிகாட்டுகிறது. 2009 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7 ஆம் திகதிய 1596/ 12 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் பட்டியலிடப்பட்டுள்ள இழப்பீட்டு தொகையுடன் காணி கையகப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் நட்ட ஈட்டு கொடுப்பனவு தொடர்பில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கொள்கை / சூழல் மற்றும் சமூக நியமத்தின் தேவைப்பாடுகளை பெருமளவில் பூர்த்திசெய்கின்றன. எனினும், கட்டாய குடியமர்த்தல்ம் குறிப்பாக முறைசாரா குடியேறிகள் காரணமாக ஏற்படும் அனைத்து இழப்புக்களையும் காணி கையகப்படுத்தல் சட்டம் கவனத்தில் கொள்வதில்லை.

**தேசிய தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் திட்டம் -** நிலகையகப்படுத்தல் சட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதோடு பாதிக்கப்பட்ட நபர்களை நியாயமான மற்றும் சமனான முறையில் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தி திட்டங்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள், அவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதையும், அவர்கள் வறியவர்கள்அல்ல என்பதையும், அரச அல்லது தனியார் திட்ட அமுலாக்கத்தின் காரணமாக தேவையற்ற முறையில் பாதிக்கப்படுவதில்லை என்பதையும் உறுதிப்படுத்த ஒரு பாதுகாப்பு கட்டமைப்பை இது கோருகிறது. தேசிய கட்டாய மீள் குடியேற்ற திட்டத்தின் மூலம், இடம் பெயர்ந்தமக்களுக்கு இடம் பெயர்ந்த நேரத்துடன் ஒப்பிடக் கூடிய வாழ்க்கைத் தரம் உறுதிசெய்யப்படுகிறது. இடம் பெயர்ந்த நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, பிரசுரிக்கப்படவுள்ள மற்றும் பொதுவில் கிடைக்கக்கூடியதான வேறுபட்ட நிலையிலான தகவல்கள் பற்றிய குடியமர்த்தல் திட்டங்களை கொள்கை வழங்குகின்றது. 20 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை இடம்பெயர்த்த வேண்டிய எந்தவொருதிட்டத்திற்கும் குடியமர்த்தல்த் திட்டங்கள் தயார் செய்யப்படல் வேண்டும். மேலும் இடமாற்றம் செய்யப்படுகின்ற இடங்களை தேர்ந்தெடுப்பதில் பாதிக்கப்பட்ட மக்கள் முழுமையாக ஈடுபட இது ஏற்பாடுசெய்கிறது. இந்த செயன்முறையின் மூலம், பாதிக்கப்பட்ட சமூகங்கள் முழு செயன்முறையின் பங்குதாரர்களாக ஆக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், தேசிய தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் திட்டம் இது வரையில் சட்டமாக் கப்பட வில்லை. தேசிய தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் திட்டத்தில் கூறப்பட்டுள்ள கொள்கைகளை அமுலாக்கல் முகவர் நிறுவனங்கள் ஏற்புடமையாக்கிக் கொள்ளவேண்டுமென்ற கடப்பாடின்மையினால், பாதிக்கப்பட்ட நபர்கள் உரிமை விடயமாக தேசிய தன்னிச்சையற்ற மீள்குடிமர்த்தல் திட்டக் கொள்கையின் நம்பகத்தன்மையினை ஏற்கவில்லை என்பதனால் தற்போதுள்ள சட்டங்களை அரசாங்கம் முழு இணக்கப்பாட்டுடன் திருத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், தேசிய தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் திட்டம் உத்தியோகபூர்வமானதும் செயல்படக்கூடியது, அரசியல் விருப்பத்தின் கீழ், நில கையகப்படுத்தல் மற்றும் கட்டாய மீள்குடியமர்த்தல் ஆகியவற்றால் ஏற்படும் நெறிமுறை மற்றும் நடைமுறை பிரச்சனைகளுக்கு நிலையான தீர்வினை வழங்கமுடியும்.

**ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச் சூழல் மற்றும் நியமம் 2** - ஆனது சாத்தியமான இடங்களில் தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தலினைத் தவிர்த்தல், திட்ட மாற்றுக்களை ஆராய்வதன் மூலம் தன்னிச்சயைற்ற மீள்குடியமர்த்தலினைக் குறைத்தல், தன்னிச்சயைற்ற மீள்குடியமர்தலினைத் தடுப்பது சாத்தியமில்லாதவிடத்து, இடம் பெயர்ந்த அனைத்து மக்களின் வாழ்வாதாரங்களையும் திட்டத்தின் முந்தைய நிலைகளுடன் ஒப்பிடும் போது அதிகரித்தல் அல்லது குறைந்தபட்சம் மீட்டமைத்தல், இடம் பெயர்ந்த வறிய மற்றும் பிற இலகுவில் பாதிக்கப்படக் கூடிய குழுக்களின் ஒட்டு மொத்த சமூக, பொருளாதார நிலையை அபிவிருத்தி திட்டங்களாக கருதிசெயல்படுத்தல், திட்டத்தால் இடம் பெயர்ந்த நபர்களை திட்ட நன்மைகளில் பகிர்ந்து கொள்ள போதுமான வளங்களை வழங்குதல் போன்றவற்றை ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச் சூழல் மற்றும் நியமம் 2 தன்னிச்சையான குடியமர்த்தல்ம் நோக்கமாக கொண்டுள்ளது.

318 ஆம் இலக்க தோட்ட சமூகத்தின் குடியமர்த்தல்த்திற்கு சுற்றுச்சூழல் மற்றும் சமூகதரநிலை 2 : கட்டாய குடியமர்த்தல்ம் ஏற்புடையதாகும். ஏனெனில் தற்போது 72 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களினால் ஆக்கிரமித்துள்ள இலங்கை அரசிற்கு சொந்தமான நிலங்களை மீட்பதற்கு இந்த திட்டம் ஈடுபட்டுள்ளது. இதனால் பௌதீக இடம்பெயர்வு, மாறுபட்ட அளவிலான பொருளாதார இடப் பெயர்வு, சொத்து இழப்பு, சொத்துக்களுக்கான அணுகல், வருமான மூலங்கள், வாழ்வாதார வழிமுறைகள் ஆகியவற்றால் பாதிக்கப்படும்.

## 1.4 செயன்முறையியல்

இலங்கை அரசு சுற்றுச் சூழல் மற்றும் சமூக கட்டமைப்பு சுற்றுச் சூழல் மற்றும் சமூக தரநிலை 2 கட்டாய மீள்குடியமர்த்தல் மற்றும் மீள்குடியமர்த்தல் கொள்கை கட்டமைப்பு என்பவற்றின் நிபந்தனைகளுக்கு அமைய, இந்த மீள்குடியமர்த்தற் திட்டம் கீழே பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக்கு அமைய தயாரிக்கப்பட்டது.

**ஊடுபார்வை**
- பூர்வாங்க திட்டத்தின் அடிப்படையில், முழுமையாக மீள்குடியேற்ற திட்டத்தினை தேவைப்படுத்துகின்ற குறிப்பிடத்தக்கவளவு மீள்குடியேற்ற பாதிப்பினைக் கொண்டிருப்பதாக, இந்த துணை திட்டமானது ஆய்வு செய்யப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**செயற்பரப்பு**
- 318, வத்தே திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய பிரச்சனைகள் மற்றும் சாத்தியமான அபாயங்கள் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு ஏற்கனவே உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை வீட்டுத் திட்டங்களுக்கு திட்டக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின் அடிப்படையில், பூர்வாங்கல் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன

**ஆய்வு செய்தல்**
- முன்மொழியப்பட்ட துணைத் திட்டம் குறிப்பிடத்தக்கவளவு மீள்குடியேற்ற பாதிப்புக்களை கொண்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றபடியினால், வாழ்வாதாரங்களின்; மீதான ஏதேனும் சாத்தியமான பாதிப்புக்களை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் சமூக பொருளாதார அடிப்படையினை உருவாக்குவதற்கான முழுமையான ஒரு கணக்கெடுப்பினை திட்ட முகாமைத்துவ பிரிவு) மேற்கொண்டுள்ளது.

**கருத்தறிதல்**
- கணக்கெடுப்புக்கு இணையாக, பாதிக்கப்பட்ட நபர்களின் எதிர்பார்ப்புக்களையும் கோரிக்கைகளையும் உறுதிசெய்து கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டு முழுவதும் கருத்தறிதல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படடடுள்ளன. இந்த கருத்தறிதல்கள் செயற்பாடுகளின் முடிவுகள் மீள்குடியேற்ற திட்டத்தினைஇற்றைப்படுத்துவதன் மூலம் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

**மீள்குடியமர்த்தல் திட்டத்தினைத் தயாரித்தல்**
- மீள்குடியமர்த்தல் திட்டத்தினைத் தயார்செய்தல் / இற்றைப்படுத்தல் இந்த திட்டத்தின் கீழான உரித்துக்கள், திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சொத்துக்கள் மற்றும் ஒவ்வொரு வகையான பாதிப்பிற்கும் தீர்மானிக்கப்படுகின்ற இழப்பீட்டின் மொத்த தொகை என்பவற்றை விபரிக்கின்றது

**வெளிப்படுத்தல்**
- பங்குதாரர்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெற்றுக் கொள்வதற்கு சமூக மட்ட கூட்டங்களில் இற்றைப்படுத்தப்பட்ட மீள்குடியேற்ற திட்டம் வெளிப்படுத்தப்படும்..

*படம் 5 குடியமர்த்தல் திட்டத்தின் தயார்படுத்தல் செயல்படிமுறை*

பௌதீக, சனத்தொகை, சமூக பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் அடிப்படைகளை நிறுவுவதற்கான ஆய்வானது 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதி நடாத்தப்பட்டது. மறு நாள், திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கான திட்டம் தொடர்பான பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட விளக்கக் காட்சியானது முக்கியமான பிரச்சனைகளை உள்ளடக்கி 318 ஆம் தோட்ட பகுதியில் நடாத்தப்பட்டது. இக் கூட்டத்தில் புதிய அடுக்குமாடி கட்டிடங்கள் முடிவடைந்ததும், 318 ஆம் தோட்ட பகுதியிற்கு மீள குடியெபர விருப்பத்தை திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள்

வெளிப்படுத்தியுள்ளனர். 2020 சனவரியில் உள்ளவாறு, குறைந்த பட்சம் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்கள் அவ்வாறு செல்வதற்கு தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

2019 இன் இறுதிக் காலப்பகுதியில் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் திட்டமிடப்பட்ட சாத்தியமான மீள்குடியமர்த்தல் சவால்களை மதிப்பிடுவதற்கு திட்ட குழு தற்போதுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டுத்திட்ட வளாகங்களை பார்வையிட்டுள்ளது. அதற்கமைய, திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மாதம்பிட்டிக் குடும்பங்களின் சமூக பொருளாதார விபரங்கள் மிகியெயசெவன சமூகங்களின் விபரங்களில் இருந்து வேறுபடலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்கெடுப்பு ஆய்வு தொடர்பான, தயார் செய்தலில், வினாக்கொத்து வகைகள், நேர்காணல் நுட்பங்கள், பங்குதாரர்கள் சந்திப்பு மற்றும் தகவல் வெளிப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கி பிரத்தியேக பயிற்சி ஒன்று திட்டக் குழுவிற்கு நடாத்தப்பட்டது. கணக்கெடுப்பை திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சூழ்நிலைப்படுத்தவும், அவர்களின் முனைப்பான பங்குபற்றலை உறுதி செய்யவும் கணக்கிடும் குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட கட்டமைப்புக்கள், நில உடமை, அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், வணிகங்கள், திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள், மக்கள் தொகை, கல்வித்தகைமை, பாதிக்கப்படக்கூடிய தன்மைகள், சமூக தொடர்புகள், சுகாதார வசதிகளுக்கான அணுகல், சமூக நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு, மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு கிடைக்கக்கூடிய அரசின் உதவி பற்றிய தரவுகளை கணக்கெடுப்பானது சேகரிக்கின்றது. இந்த குடியமர்த்தல் திட்டத்தினை தயார் செய்வதற்கு இந்த தரவுகள் பின்னர் பயன்படுத்தப்பட்டுள்ளன.



*படம் 6 – 318 ஆம்தோட்டத்தில் ஒக்டோபர் 16 அன்று நடாத்தப்பட்ட திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலான ஆய்வு*

**மீள்குடியமர்த்தல் திட்டத் தயாரிப்பானது,** 2019 பெப்ரவரியில் முடிவடைந்துள்ளது. பின்னர் இது மேலும் திருத்தப்பட்டு 2020 ஓகத்து மாதத்தில் வெளியிடப்பட்டது. இற்றைப்படுத்தப்பட்ட மீள்குடியமர்த்தல் திட்டத்தின் அச்சு பிரதிகள் தளத்திலுள்ள திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் வலைத் தளங்களிலும் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

## 1.5 சமூக, பொருளாதார தாக்கம்

கீழே வந்துள்ள அட்டவணையானது, சாத்தியமான பாதிப்புக்களை சுருக்கமாக கூறுகின்றது. இத் திட்டத்தினால் 61 குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்வுக்கு வழிவகுத்துள்ளதோடு, இதன் விளைவாக அவர்கள் தமது குடியிருப்பு கட்டமைப்புக்களையும் முழுமையாக இழக்க உள்ளனர். பௌதீக ரீதியாக இடம்பெயர்ந்த அனைத்து வீட்டுடமைகளும் அடுக்கு மாடித்தொடர் ஒன்றில் குடியமர்த்தப்படவுள்ளனர். வீட்டு வியாபாரத்தினை நடாத்துகின்ற திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்று உள்ளடங்கலாக நான்கு வணிக கட்டமைப்புக்கள் பாதிக்கப்பட உள்ளன. எனவே, இத்தகைய திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு திட்டத்தின் காரணமாக வாழ்வாதார இழப்புகளும் ஏற்படுகின்றன. 318 ஆம்தோட்டத்திலுள்ள அனைத்து குடியிருப்பாளர்களும் தமது நிலங்களுக்கு உரித்தினை வைத்திருப்பதனால் எந்தத் தனியார் நிலங்களுக்கும் இழப்பு ஏற்படமாட்டாது.

| பாதிப்பு வகை | கட்டமைப்புக்கள் மற்றும் குடும்பங்கள் மீதான பாதிப்பு | | பாதிக்கப்பட்ட பரப்பு (சதுர அடி) |
|---|---|---|---|
| | கட்டமைப்புக்கள் | குடும்பங்கள் | |
| குடியிருப்பு கட்டமைப்புக்களின் இழப்பு | 61 | 61 | 3,0404 |
| நுண் வணிகங்கள் /கட்டமைப்புக்களின் இழப்பு | 04 | 04 | 890 |
| தனியார் நிலங்களின் இழப்பு | 0 | 0 | 0 |
| வாழ்வாதாரங்களின் இழப்பு | த.இ | 04 | த.இ |
| வருமான இழப்பு | த.இ | 04 | த.இ |

*அட்டவணை 2 : பாதிப்புக்கள் பற்றிய சுருக்கம்*

## 1.6 சாத்தியமான சமூக பாதிப்புக்கள்

இத் திட்டத்தினால் 72 வீட்டுடமைகள் பாதிக்கப்பட உள்ளன. அதற்கமைய, ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இந்த வீட்டுடமைகளில் 11 வீட்டுடமைகள் வேறிடம்செல்வதற்கான தமது உடன்பாட்டினை வழங்கவில்லை. வேறிடம் செல்லல் என்பது, குறிப்பாக, அது கட்டாய சூழ்நிலையில், சிலருக்கு அதிர்ச்சிகரமானதொரு அனுபவமாக இருக்கலாம் அல்லது பெரும்பாலான மக்களுக்கு குறைந்த பட்சம் மன அழுத்தத்தையாவது ஏற்படுத்தும். மாதம்பிட்டியில் வசிக்கிக்கின்ற, திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், 20 – 30 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு வசித்து வருகின்றனர். எனவே அவர்கள் வாழ்ந்த சமூக சூழ்நிலையின் பின்னணியில், அவர்கள் தமது சமூகத்துடன் இரண்றக் கலந்துள்ளனர். அருகிலுள்ள பாடசாலைகளில் குழந்தைகளின் கல்வி, தமது வாழ்வாதாரங்கள் என்பன தமது வசிப்பிடத்துடன் சிக்கலான முறையில் இணைத்துள்ளன. மீள்குடியமர்த்தலின் விளைவாக, திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது வசித்து பழகிய பகுதிகள் மற்றும் வீடுகளிலிருந்து உயர் அடுக்குமாடி குடியிருப்புக்களுக்கு நகருவார்கள். எனினும், அவர்களின் தற்போதைய இருப்பிடத்திலிருந்து குடியமர்த்தல்த் தளத்திற்கான தூரம் 950 மீற்றர் மாத்திரமேயாகும். எனவே, அவர்கள் தங்களது வாழ்வாதாரங்களையும் குழந்தைகளின் கல்வியையும் எந்த வித தடையும் இன்றி தொடர்ந்து செல்ல முடியும் என எதிர்பார்க்கலாம்.

வணிக கட்டமைப்புக்களின் இழப்பு உரிமையாளர்கள் மற்றும் அங்கு பணிபுரிபவர்கள் வாழ்வாதாரத்தை நேரடியாக பாதிக்கிறது. வணிக கட்டமைப்புக்களை பொறுத்தவரை 318 ஆம் இலக்கத் தோட்டப் பகுதி இரண்டு சிறிய பல் பொருள் வாணிபங்கள், ஒரு அலுமினிய பட்டறை, இரும்பு துண்டு சேகரிப்பாளர் ஒருவர் மற்றும் உணவு பதனிடல் ஆகியவற்றை கொண்டுள்ளது. இந்த சிறிய வியாபாரங்கள் உண்மையில் வீட்டின் சில பகுதியினுள் மேற்கொள்ளப்படுகின்றன. குடியமர்த்தல்த்துடன், இந்த கட்டமைப்புக்கள் இழக்கப்படும். எனவே, குடியமர்த்தல் கொள்கை கட்டமைப்பு இற்கு அமைவாக, இந்த திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு பொருத்தமான வாழ்வாதார மீளளிப்பு உதவிகள் வழங்கப்படும். இழப்பீட்டு சூத்திரத்தில் காட்டப்பட்டுள்ள படி, இந்த

வணிக கட்டமைப்புக்களை வைத்திருக்கும் குடும்பங்களுக்கு ஆறு மாத காலத்திற்கு வருமான இழப்பிற்கு நட்டஈடு வழங்கப்படும். வணிக கட்டமைப்புக்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் பற்றிய விரிவான தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. பல் பொருள் வாணிபங்கள் மற்றும் அலுமினிய பட்டறை என்பன பகுதியளவிலான நிரந்தர கட்டமைப்புக்களாகும்.

| த ொ .இ | கோ. இல | வணிக வகை | கட்டமைப்பின் தன்மை | செயற்பாட்டு மட்டம் | எதிர்பார்க்கப்பட்ட மாதாந்த வருமானம் | வருமான இழப்பின் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 59 | பல் பொருள் வாணிபம் | வீட்டில் உள்ள பல் பொருள் வாணிபம் | வீட்டிலுள்ள மனைவி / மகன் | ரூ.20000.00 | (20000 × 06 மாதங்கள்) |
| 2 | 11 | சிறிய பல் பொருள் வாணிபம் | பகுதியளவில் நிரந்தரம் | உரிமையாளர் | ரூ14000.00 | ரூ. 84,000.00 |
| 3 | 58 | உணவு பதனிடல் | பகுதியளவில் நிரந்தரம் | உரிமையாளர் | ரூ 35000.00 | ரூ.210,000.00 |
| 4 | 47 | இரும்பு துண்டு விற்பனை | வீட்டுடன் இணைந்ததான களஞ்சிய அறை | உரிமையாளர்கள் மருமகன் | ரூ.40000.00 | ரூ.240,000.00 |
| 5 | 138 | அலுமினிய பட்டறை | வீட்டின் அடித்தளம் | உரிமையாளர்கள் கணவன் | ரூ.40000.00 | ரூ. 240,000.00 |

*அட்டவணை 3: தளப் பகுதியில் தற்போது இயங்கும் நுண் வணிகங்களின் செயல் இழப்பு*

## 1.7 வாழ்வாதாரங்கள், பாடசாலைகள், நடமாட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான அணுகல் மீதான பாதிப்பு

தற்போது 318, தோட்டப் பகுதியில் வசிப்பவர்கள் அனைவரும் தற்போதுள்ள இடத்திலிருந்து 950 மீற்றர் தொலைவிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு வளாகமொன்றில் குடியமர்த்தல்ப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர். எனவே, அணுகல் மற்றும் நடமாடுதல் தொடர்பான எந்த வித சவால்களையும் எதிர்கொள்ளமாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. குடியமர்த்தல் பகுதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்வகிக்கப்படுகிறது. மேலும் புதிய தளத்திற்கான அணுகல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பாதுகாப்பு அதிகாரியினால் ஒரு வாயிலின் ஊடாக மேற்பார்வை செய்யப்படும். எனவே. குடியமர்த்தல்ப் பகுதி அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் பாதுகாப்பான இடமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றைய குடியிருப்புக்கள் மற்றும் 318, தோட்டப் பகுதியிற்கு அடுத்ததாக அமைந்துள்ள பாடசாலை போன்றவற்றிற்கு ஏற்படும் தூசி மற்றும் சத்தத்தின் பாதிப்பை குறைப்பதற்கு சுற்றுச் சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ திட்டத்தின் பரிந்துரைகளை திட்ட முகாமைத்துவ பிரிவு பின்பற்றும்

## 1.8 சாதகமான தாக்கங்கள்

318, தோட்டப், மாதம்பிட்டியவில் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களை மீள்குடியேற்றுவது முக்கியமான சமூக மற்றும் கலாசார நன்மைகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல குறைந்த நடுத்தர வருமான வீடுகள் இருந்தாலும், 318, தோட்டப்பயில் உள்ள சமூகம் பல சிறிய வீடுகளை கொண்டுள்ளது. அவற்றில் சில தரமற்ற மற்றும் தற்காலிக பொருட்களை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளன. வெள்ள தடுப்பு அளவீடுகள் இல்லாதது அவ்வவ்போது ஏற்படுகின்ற வெள்ளத்தால் குடியேற்றத்தை பாதிக்கக்கூடியதாக ஆக்குகின்றது. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் குடியமர்த்தல்ம் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நவீன, பாதுகாப்பான மற்றும் வசதியான குடியிருப்புக்களில் வாழ்வதற்கு வாய்ப்பளிக்கும். ஒரு நவீன வளாகத்தில் குடியமர்த்தல்ம் செய்வது திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து குடியிருப்புக்கள் நீர்குழாய் மூலமாக நீர், தேவையான பொருத்துதல்களுடன் குளியலறை மற்றும் மின்சாரம் என்பவற்றுடன் வழங்கப்படுகின்றன. அடுக்குமாடி கட்டட வளாகம் பொது விளக்குகள் மற்றும் மின்உயர்த்திகளுடன் வழங்கப்படுகிறது. பயிற்சி வழங்கல்

உட்பட வாழ்வாதார மேம்படுத்தலுக்கான உதவியுடன் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் வாழ்வாதாரங்களை விருத்தி செய்வதற்கு திட்ட முகாமைத்துவ பிரிவு பங்களிப்பு செய்யும்.

## 2 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டுடமைகளின் சமூக பொருளாதார விபரங்கள்

கணக்கெடுப்பானது 318 ஆம் இலக்க தோட்டப் பகுதியில் வாழுகின்ற, திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பங்கள் என்பனவற்றின் விபரங்களை விரிவாக வழங்குகிறது. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வருமானம் ஈட்டுபவர்களில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் குறைந்தபட்ச ஊதியத்தை விட மாதாந்த வருமானம் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கின்றனர் அதாவது ஒட்டுமொத்த சராசரியானது ரூபா 36,000 இற்கு சற்று குறைவானதாகவும் மற்றும் சராசரி ரூபா 62,596 ஆக உள்ளதாக தெரிவிக்கின்றனர். கொழும்பில் தனிநபர் வருமானத்திற்கான வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள வருமான புள்ளிவிபரங்கள் 2016 டிசம்பரில் உள்ளபடி ரூபா 5114 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சராசரி திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அளவு 4.1 ஐப் பயன்படுத்தி, 318, தோட்டப் பகுதிக்காக சரிசெய்யப்பட்ட திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வறுமைக்கோடு ரூபா 21,000 இற்கு சற்று குறைவாக காணப்படுகிறது. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றின் வருமானம் மாத்திரம் இந்த இப்பகுதிக்குரிய வறுமைக் கோட்டிற்கு கீழாக உள்ளது எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

21-வீடுகளில் மாதாந்த சராசரி வருமானம் வறுமை கோட்டை விட அதிகமாக உள்ளது. 32 வீடுகள் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்களாக அல்லது சராசரி மாத வருமானம் ரூபா 46,097 இனை விட அதிகமாக உள்ளது என திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மாதாந்த வருமான மதிப்பீடு வெளிப்படுத்தியுள்ளது. ஐந்து வீடுகள் வறுமை கோட்டிற்கு சற்று மேலே இருந்தாலும், அவர்களின் மாத சராசரி வருமானம் ரூபா 21,875 இனை விட குறைவாக உள்ளது. ஒரு வீட்டிற்கு வருமானம் ஈட்டும் அல்லது பெறும் உறுப்பினர்களின் சராசரி எண்ணிக்கை 1.75 ஆகும், இது தேசிய சராசரியான 1.8 உடன் இணையாக உள்ளது. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் அதிகமானோர், 20 ஆண்டுகளுக்கு மேலாக தளத்தில் வசித்து வருகின்றனர். அவர்களின் வீடுகள் நிரந்தரமான கட்டமைப்புக்கள், பெரும்பான்மையான திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குழாய் நீர் இணைப்புக்கள், மின்சாரம், உள்ளக கழிப்பறைகள் மற்றும் சமையலறை எரிவாயுவின் பயன்பாடு ஆகியவற்றை கொண்டுள்ளனர். பெண்கள் தங்கள் துணைவர்களிடமிருந்து அதிக கட்டுப்பாடு இன்றி பொதுச் செயற்பாடுகளில் பங்கேற்கவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் சுதந்திரம் இருப்பதாக தெரிகிறது. பெண்கள் முனைப்பான பங்குபற்றுனர்களாகவும் பெரும்பாலும் பங்குதாரர் கூட்டங்களில் ஆண்களை விட அதிகமாக இருந்துள்ளனர்.



படம் 7 - ஆண்டுகள் அடிப்படையிலான வாழ்கை செலவினம் –318 ஆம் இலக்க தோட்டம்

திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இலங்கை அரசின் நிலத்தை சட்டபூர்வமாக ஆக்கிரமிக்கவில்லை என்றாலும், அவர்களில் பெரும்பாலானோர் நிலையான வாழ்வாதாரங்களையும், 318, தோட்டப் பகுதியில் ஒப்பீட்டளவில் நீண்ட வாழ்க்கை வரலாற்றையும் நிரூபிக்கின்றனர். சில

திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இரண்டு மாடி வீடுகள் உள்ளன. இது 318, தோட்டப் பகுதியில் உள்ள மக்களின் ஒப்பீட்டளவில் நிலையான பொருளாதார மற்றும் சமூக நிலைக்கு சான்றாக உள்ளது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு குடியமர்த்தல்ம் தொடர்பில் கடுமையாக அழுத்தம் கொடுக்கப்படவில்லை எனவும், நகர்வதற்கு மேலதிக சலுகைகளை கோரலாம் எனவும் கருதப்படலாம்.

| வகை | மூலம் | பயனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| குடிநீருக்கான அணுகல் | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை | 36 |
| | பொதுவான மார்க்கம் (வீதியில் உள்ள நீர்க் குழாய்) | 19 |
| | பதில் இல்லை | 6 |
| ஒளியமைப்பு மூலம் | இலங்கை மின்சார சபை மின்னிணைப்புக்கள் | 55 |
| | மண்ணெண்ணெய் | 1 |
| | பதில் இல்லை | 5 |
| சுகாதார வசதிகளுக்கான அணுகல் | பாய்நீர்க் கழிப்பறை | 32 |
| | குழி கழிவறை | 14 |
| | பொது மலசல கூடம் | 6 |
| | பதில் இல்லை | 9 |
| சமையலுக்கான சக்தி மூலம் | சமயலறை எரிவாயு | 54 |
| | மண்ணெண்ணெய் | 2 |
| | விறகு | 1 |
| | பதில் இல்லை | 4 |
| கிடைக்கக் கூடிய தொலைபேசி | நிலையான இணைப்புக்கள் | 8 |
| | செல்லிட தொலைபேசி | 41 |
| | எதுவுமில்லை | 12 |
| இணைய அணுகல் | சிறிலங்கா ரெலிகொம் | 1 |
| | தனியார் வழங்குனர் | 1 |
| | செல்லிட தொலைபேசி | 26 |
| | எதுவுமில்லை | 4 |
| | பதில் இல்லை | 29 |
| கிடைக்கக்கூடிய தொலைக்காட்சி | சிறிலங்கா ரெலிகொம் | 12 |
| | தனியார் வழங்குனர் | 06 |
| | எதுவுமில்லை | 19 |
| | பதில் இல்லை | 24 |

*அட்டவணை 4: கிடைப்பனவாகவுள்ள வசதிகள் மற்றும் வாய்ப்புக்களின் சுருக்கம்*

*அட்டவணை 5 : பாதிக்கப்பட்டவர்களை வயதுக் குழுக்கள், பாலின ரீதியான வகைப்படுத்தல்*

| வயது பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 5 இற்கு கீழ் | 09 | 13 | 22 |
| 6-10 | 11 | 14 | 25 |
| 11-17 | 19 | 24 | 43 |
| 18-30 | 35 | 30 | 63 |
| 31-40 | 30 | 28 | 58 |
| 41-60 | 29 | 32 | 59 |
| 60 இற்கு மேல் | 12 | 16 | 28 |
| **மொத்தம்** | **143** | **157** | **300** |

*அட்டவணை 6 பாதிக்கப்பட்டவர்களை வீட்டுடமை அங்கத்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வகைப்படுத்தல்.*

| வீட்டுடமை உறுப்பினர்கள் | பாதிக்கப்பட்டவர்களின் எண். |
|---|---|
| 1-2 | 9 |
| 3-4 | 26 |
| 5-7 | 15 |
| 7 இற்கு மேல் | 11 |

*அட்டவணை7 : பாதிக்கப்பட்ட வீட்டுடமை அங்கத்தவர்களை வயது, பாலின அடிப்படையில் வகைப்படுத்தல்*

| வயது பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 18-30 | 1 | 5 | 6 |
| 31-40 | 9 | 5 | 14 |
| 41-60 | 8 | 14 | 22 |
| 61இற்கு மேல் | 7 | 12 | 19 |
| மொத்தம் | **25** | **36** | **61** |

*அட்டவணை :8: பாதிக்கப்பட்ட வீட்டுடமைகளை இனத்துவ அடிப்படையில் பாலின ரீதியாக வகைப்படுத்தல்*

| இனம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 70 | 82 | 151 |
| தமிழ் | 45 | 48 | 93 |
| முஸ்லிம் | 28 | 26 | 54 |
| வேறு | 1 | 1 | 2 |
| மொத்தம் | **143** | **157** | **300** |

*அட்டவண 9: பாதிக்கப்பட்ட வீட்டுடமைளின் கல்வி அடைவினை பாலின ரீதியாக வகைப்படுத்தல்*

| நிலை | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| செயல்பாட்டு கல்வியறிவு இல்லாதவர்கள் | 22 | 33 | **55** |
| கையொப்பமிட முடியும் | 0 | 2 | **2** |
| பல்கலைக்கழகம், அதற்கு மேல் | 3 | 1 | **4** |
| | 25 | 36 | **61** |

*அட்டவணை 10: பிரிவுகள் அடிப்படையில் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய மக்களை வகைப்படுத்தல்*

| | |
|---|---|
| பௌதீக ரீதியாக அல்லது உள ரீதியாக அங்கவீனமுற்றோர்/ ஊனமுற்றோர் | 6 |
| ஆதரவற்றோர் | 1 |
| திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமை வீட்டுடமைகள் | 1 |
| மொத்தம் | 08 |

*அட்டவணை 11 பாதிக்கப்பட்ட மக்களின் வருமான மூலங்களை பாலின அடிப்படையில் வகைப்படுத்தல்*

| தொழில் வகை | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| சுயதொழில் | 7 | 9 | 16 |
| தனிப்பட்ட வியாபாரம் | 2 | 1 | 3 |
| அரச துறை, ஏனைய தரத்திலான தொழில் | 8 | 1 | 9 |
| தனியார் துறை நிறைவேற்றுத் தர வேலை | 3 | 3 | 6 |
| தனியார் துறை பிற தர தொழில்கள் | 7 | 5 | 14 |
| வெளிநாட்டு வேலை | 6 | 4 | 10 |
| தொழில்நுட்ப ரீதியானவை | 2 | 0 | 2 |
| தேர்ச்சிமிக்க தொழிலாளர்கள் | 10 | 4 | 10 |
| பகுதியளவில் தேர்ச்சிமிக்க தொழிலாளர் | 16 | 5 | 25 |
| **மொத்தம்** | **61** | **32** | **93** |

*அட்டவணை 12 : வருமாம் ஈட்டுபவரின் பாலினம், வருமான மட்டங்கள் ரீதியாக திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சராசரி மாதாந்த வரு-மானங்களைஅவகைப்படுத்தல் (ரூபா)*

| வருமான மட்டம் | ஆண் உழைப் பாளர் | பெண் உழைப்பா ளர் | மொத் தம் |
|---|---|---|---|
| ரூ.5,000 இற்கு கீழ் | 0 | 1 | 1 |
| 5,001 – 10,000 | 0 | 0 | 0 |
| 10,001 – 15,000 | 4 | 4 | 8 |
| 15,001 – 25,000 | 13 | 16 | 29 |
| 25,001 – 50,000 | 20 | 4 | 24 |
| 50,001 – 75,000 | 7 | 3 | 10 |

| | | | |
|---|---|---|---|
| 75,001 – 100,000 | 4 | 1 | 5 |
| 100,001 – 150,000 | 1 | 1 | 2 |
| 150இ000 இற்கு மேல் | 0 | 0: | 0 |
| பதில் இல்லை | 12 | 2 | 14 |
| **மொத்தம்** | **61** | **32** | **93** |

*படம் 13: தெரிவு செய்யப்பட்ட வகுதிகள் அடிப்படையில் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மாதாந்த செலவினத்தை வகைப்படுத்தல். (ரூபா)*

| செலவின வகுதி | மாதாந்த செலவினம் (ரூபா) |
|---|---|
| உணவு | 20,712 |
| உடைகள் | 2,056 |
| நீர் | 617 |
| மின்சாரம் | 2,354 |
| எரிபொருள் | 2,722 |
| எரிவாயு | 1,807 |
| விறகு | 1,250 |
| புகையிலை /வெற்றிலை | 1,500 |
| மதுபானம் | 2,250 |
| நன்கொடை | 238 |
| தொடர்பாடல் / தொலைபேசி | 1,109 |
| போக்குவரத்து | 4,237 |
| கல்வி | 4,094 |
| சுகாதாரம் | 2,750 |
| குத்தகை / அடகுவைத்தல் கொடுப்பனவுகள் | 5,080 |
| சமய செயற்பாடுகள் | 880 |
| வாகன பழுதுபார்த்தல் | 5,727 |
| **மொத்தம்** | 59,383 |

*அட்டவணை 14: வீட்டுடமைச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு*

| | |
|---|---|
| நாளாந்த குடும்ப விடயங்களில் தீர்மானம் எடுப்பதற்கான அவகாசம் | 53 |
| சமூக,பொதுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அவகாசம் | 96 |
| சமய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அவகாசம் | 145 |
| ஊடீழு களில் பதவிகளை வகிப்பதற்கான இடம் | 80 |
| தேவையேற்பட்டால் அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு இடம் | 45 |
| குழந்தைகளின் கல்வியில் தீர்மானம் எடுத்தல் | 56 |
| கிடைக்கும் போது வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் | 80 |

*glk; 15: gy;yhz;L gUt jhtuq;fspd; ghjpg;G*

| தாவரத்தின் வகை | உரிமையாளர்கள் | பாதிக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பலாப்பழம் (ஆர்டோகார்பஸ் ஹீட்டோரோபில்லஸ்) | 1 | 1 |
| மாம்பழம் | 08 | 08 |
| பிற பழங்கள் | 10 | 10 |
| பிற மரங்கள் | 35 | 35 |
| மொத்தம் | 54 | 54 |

ஹெலமுது உயனவவைச் சுற்றியுள்ள மக்கள் சமூகம் இதே போன்ற சமூக பொருளாதார விபரங்களை கொண்டுள்ளது. மேலும் 318, தோட்டப் பகுதியிலுள்ள திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் போன்று கொழும்பின் தகுதியற்ற பகுதிகளிலிருந்து மீளகுடியேறியுள்ளனர். அவர்கள் ஒப்பீட்டளவில் குறுகிய காலமாக தளத்தில் வசித்து வருவதோடு, இன்னும் மீள்குடியேறுகின்ற செயன்முறையில் உள்ளனர். ஹெலமுது உயனவிற்கு அருகிலுள்ள பிற அடுக்குமாடி குடியிருப்புக்களில் வசிக்கும் குடும்பங்கள் மற்றும் திட்ட பணியாளர்களுக்கு இடையே நடைபெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் ஏற்கனவே, வசிக்கின்ற சமூகத்திற்கு மிகக் குறைவான மற்றும் தற்காலிக எதிர்மறை பாதிப்பு, முக்கியமாக இடமாற்றத்தின் போது சத்தம் தொடர்பான பிரச்சனைகளை குடியமர்த்தல்மானது கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 318 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான அடுக்குமாடி கட்டிட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் அறிமுகப்படுத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நிலையான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கு மேலதிகமாக, திட்ட பணியார்கள் இரு சமூகங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளனர். சமூக இணக்கப்பாடுகள் மற்றும் அடுக்குமாடி நடத்தை நெறிமுறைக்கான பரஸ்பர மரியாதை ஆகியவற்றை விருத்தி செய்வதற்கு அறிமுக செயலமர்வுகள் நடத்தப்படும்.

# 3 - தகுதி மற்றும் உரித்துக் கொள்கை

## 3.1 கொள்கை மற்றும் சட்டப் பணிச்சட்டகம்

இந்த குடியமர்த்தல் திட்டமானது, திட்டத்தின் குடியமர்த்தல் கொள்கை பணிச்சட்டகத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுவதால், இந்த குடியமர்த்தல் திட்டத்தை தயாரிப்பதிலும் இற்றைப்படுத்தலிலும் இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் கொள்கை கட்டமைப்புக்கள் என்பனவற்றின் அடிப்படையில் பின்வரும் குடியமர்த்தல் கொள்கைகள் பின்பற்றப்பட்டுள்ளன :

- இலங்கை மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கொள்கையின் சட்ட மற்றும் கொள்கை ஏற்பாடுகளுடன் இணங்குதல் (அவற்றிற்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டால் கடைசியாக குறிப்பிடப்பட்டதுடன் இணங்குதல்).
- மனித இடம்பெயர்வு மற்றும் குடியமர்த்தல் என்பனவற்றினை முடிந்த வரை குறைத்தல்.
- உள்ளூர் சமூக, பொருளாதார அபிவிருத்தி சூழலுக்கு பொறுப்புக் கூறல்
- சமூக முகாமைத்துவம் மற்றும் குடியமர்த்தல் திட்டத்தில் பாலின கருத்தாய்வுகளை உள்ளடக்குதல்.
- அனைத்து திட்ட பாதிப்புக்களையும் கண்டறிந்து அனைத்து இழப்புக்களையும் சரியாக பதிவு செய்தல்.
- நிலத்தின் கையகப்படுத்தல் மற்றும் குடியமர்த்தல் செயல்பாடுகளை திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக திட்டமிட்டு செயல்படுத்துதல்.
- திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவித்து பகிரங்க கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- பாதிக்கப்பட்ட நபர்கள் / குடும்பங்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை அவர்களின் முந்தைய நிலைக்கு சமனாக அல்லது சிறந்த நிலைமைக்கு மீளமைப்பு செய்வதற்கு உதவுதல்.
- பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான திட்ட நன்மைகளை அதிகரிப்பதற்கு உதவுதல்.
- மனக்மனக்குறைகள் கண்காணி;ப்பு நடைமுறைகளை செயல்படுத்துதல்.
- குடியமர்த்தல் தளங்களின் நிலையான சுய முகாமைத்துவத்தை உறுதி செய்தல்.

இத்தகைய பொதுவான கொள்கைகள் மற்றும் திட்டத்திற்கான குடியமர்த்தல் கொள்கை கட்டமைப்பின் உரித்து தாயம் ஆகியவற்றின் அடிப்படையில், 318, தோட்டப் பகுதியில் வசிக்கின்ற திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பொருத்தமான உரித்து தாயம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பாதிப்பின் அளவு மற்றும் விஸ்தீரணத்தை கவனத்தில் கொள்ளாமல், கட்டாய குடியமர்த்தல் பாதிப்புக்களை ஏற்படுத்தும் அனைத்து கூறுகளுக்கும் உரித்து தாயம் ஏற்புடையதாகும். எந்தவொரு எதிர்கால கட்டத்திலும், மேலதிகமான குடியமர்த்தல் பாதிப்புக்கள் அடையாளம் காணப்பட்டால், இந்த உரித்து தாயத்திற்கு ஏற்ப இழப்பீடு மற்றும் வாழ்வாதார மீளமைப்பு சலுகைகளுடன் இத்தகைய பாதிப்புக்களை கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை திட்ட முகாமைத்துவ பிரிவு மேற்கொள்வதன் மூலம் இந்த குடியமர்த்தல் திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படமுடியும். உரித்து தாயம் தீர்வாக அமைகின்றது.மேலும், கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் சாத்தியமான அனைத்து வகை இழப்புக்கள் மற்றும் பாதிப்புக்களை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பொதுவான உரித்து தாயத்தின் அடிப்படையில், இணைப்பு 01 இல் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான விசேட இழப்பீட்டு தாயம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 16 விரிவான உரித்து தாயம்**

| இழப்பின் வகை | திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வகை | உரித்துக்கள் |
|---|---|---|
| குடியிருப்பு கட்டமைப்பினை இழத்தல் | நிலத்திற்கான உரித்து இன்றி 61 முறைசாரா குடியேறிகள் | மீள்குடியமர்த்தல் மற்றும் புனர்வாழ்வு உதவி<br>1. வீட்டு உரிமையாளரினால் அடுக்குமாடி முகாமைத்துவ குழு நிதியம் மற்றும் வீட்டுடன் சம்பந்தப்பட்ட பரமரிப்புச் செலவினத்தினை கொடுப்பனவுசெய்தல் என்ற நிபந்தனையின் கீழ் பல அடுக்குமாடி வீடு திட்டத்தில் 550 சதுர அடியில் மின்சார வசதியுடன் அடிப்படை வசதிகளுடன் கூடிய இலங்கை ரூபாவில் 7,000,000 மதிப்புள்ள வீடொன்றினைப் பெற உரிமைபெறுவார் இதில் இலங்கை ரூபா 1,200,000 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டுடமைகளினால் 400 மாதாந்த தவணையில் இலங்கை ரூபாவில் மாதமொன்றுக்கு ரூபா 3,000 வீதம் உரிமையாளரிடமிருந்து அறவிடப்படும். பழைய கட்டமைப்புக்களை வெளியேற்றுவதற்கு 5000 ரூபா போக்குவரத்து கொடுப்பனவு<br>2. இந்த கொடுப்பனவு அனைத்து குடியமர்த்தல்ப்பட்ட திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் வழங்கப்படும்.<br>3. புதிய வீட்டு அலகிற்கிற்கான நிரந்தர இடமாற்றம் வழங்கப்படும் வரையில் அவசர இடமாற்றம் ஏற்பட்டால் மாதத்திற்கு ரூபா 15000 வாடகை கொடுப்பனவு .<br>4. கல்நார் தவிர கட்டுமான பொருட்களை மீட்டெடுப்பதற்கான உரிமை (புதிய வீட்டு வளாகத்தில் பழைய பொருட்களின் பயன்பாடு அனுமதிக்கப்படாது). |
| வணிக கட்டமைப்புக்களை இழத்தல் | உரித்துக்கள் இன்றி முறையற்ற ரீதியில் குடியேறியவர்கள் | 1. பொருத்தமான தொடர்புடைய மாதாந்த கட்டணங்களின் கொடுப்பனவுகளுக்கு அமைவாக நீண்ட கால குத்தகை அடிப்படையில் மின்சார இணைப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் வணிக கட்டமைப்புக்களுக்காக புதிய பொருத்தமான இடமொன்றை வழங்குதல் அல்லது வாழ்வாதார மீட்டமைப்பு பயிற்சிகளை வழங்குதல்.<br>2. உரிய பயிற்சியானது பொருத்தமானதாக மற்றும் அவசியமானதாக இருக்கின்ற வணிகத்தை மேம்படுத்த பயிற்சி வழங்குதல்.<br>3. நிலைமாறு காலங்களில் அல்லது குடியமர்த்தல்த்திற்கு பின்னர் ஆறு மாதத்திற்குள் வணிகத்திற்கு ஏதேனும் வருமான இழப்பு ஏற்பட்டால், வருமான இழப்புக்களுக்கான கட்டணத்தை வழங்குதல். |
| இடம்பெயர்வு காரணமாக வாழ்வாதாரம் அல்லது வருமான இழப்பு | சுயதொழில் செய்பவர்கள் அல்லது குடியமர்த்தல்ம் காரணமாக வாழ்வாதார இழப்பு அல்லது வருமான இழப்பை அனுபவிக்கும் சிறு வணிகங்களை நடத்துபவர்கள். | 1. பயிற்சி, கடன் அணுகல், திறன் பயிற்சிகள்.<br>2. வருமான இழப்பு கொடுப்பனவுகள் என்பது கிடைக்கக்கூடிய பதிவுகள் மற்றும் பண்புசார் தரவுகளின் அடிப்படையில் ஆறு மாத சராசரி வருமானத்திற்கு சமமான பண உதவியாக இருக்கும். |

| | | |
|---|---|---|
| வேறு ஏதாவது சமூக பாதிப்பு அல்லது பொருளாதார இழப்பு | பாதிக்கப்படக்கூடிய நபர்கள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்பாராத பாதகமான விளைவுகளை அனுபவிக்கலாம். | 1. பொருத்தமான வாழ்வாதார மீளமைப்பிற்காக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உட்பட பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு உதவுதல்.<br>2. பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் ஏதாவது எதிர்பாராத பாதகமான பாதிப்புக்களைக் குறைப்பதற்கு மற்றும் புதிய குடியிருப்பில் அவர்களின் வாழ்க்கையை நடாத்துவதற்கு ரூபா 50,000 காசு உதவியினை பெறுவார்கள்.<br>3. சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் சமுர்த்தி கொடுப்பனவு, முதியோர் கொடுப்பனவு, போசாக்கு உதவி மற்றும் வறுமை உதவி போன்ற அரச நல உதவிக்கு தகுதியான பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான அணுகலை திட்ட முகாமைத்துவ பிரிவு மேற்கொள்ளும்.<br>4. புதிய வீட்டு வளாகத்தில் வீட்டு பராமரிப்பு பணிகள் மற்றும் திட்டத்தின் கீழ் கட்டுமான பணிகளில் வேலைவாய்ப்பு. |

## 3.2 உரித்துக்களை கணிப்பீடு செய்வதற்கான செயல்முறையியல்

### (அ) குடியிருப்பு கட்டமைப்புக்களின் இழப்பு

அனைத்து திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் நில உரித்துக்கள் இன்றி அரச நிலங்களை ஆக்கிரமித்து முறையற்ற ரீதியில் குடியேறியவர்கள், இதனால் நில இழப்பிற்கான நட்டஈட்டிற்கு அவர்கள் தகுதியற்றவர்கள். அவர்களுக்கு 550 சதுர அடியிலான மாற்று குடியிருப்பு இடம் வழங்கப்படும், இது சுமார் ரூபா 7000 000 மதிப்புடையது (மொத்த கட்டமான செலவை வீட்டு அலகுகளின் எண்ணிக்கையினால் வகுத்து கணக்கிடப்படுகிறது). இடமாற்றத்தின் மொத்த மூலதன செலவின் ஒரு பகுதி (கட்டுமான செலவு உட்பட) அதாவது ரூபா 1,200,000 புதிய அடுக்குமாடி குடியிருப்புக்கள் பெறுபவர்களிடமிருந்து 400 மாத காலப்பகுதியில், அதாவது மாதத்திற்கு ரூபா 3,000 வீதம் அறவிடப்படும் என்ற அடிப்படையில் இது மேற்கொள்ளப்படுகிறது.

நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை அவற்றின் பாதிக்கப்பட்ட கட்டமைப்புக்களை மதிப்பிட அனுமதிக்கிறது. மேலும் அவற்றின் மதிப்பு வழங்கப்பட்ட ஒரு வீட்டு அலகு, அதாவது ரூபா 7 000 000 ஐ விட அதிகமாக இருப்பதை நிரூபிக்க முடிந்தால், அத்தகைய மேலதிக தொகையானது மாற்று செலவில் ஈடுசெய்யப்படும். பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக, 33 வருட காலப் பகுதியினுள் உரிய வீட்டுக்காரர்களால் மொத்தக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்னரே வீட்டு அலகின் உரிமை கைமாற்றம் செய்யப்படும்,

- திட்டத்தால் பாதிக்கப்பட்ட வீட்டுடமைகள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு முன் 400 மாதங்களுக்கு முன் பணம் செலுத்துகையில், முழு கட்டணம் செலுத்திய நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் வீட்டுப் பிரிவுக்கு உரிமைப் பத்திரத்தைப் பெற உரிமை உண்டு.
- கைமாற்று உறுதிப்பத்திரத்தை பெற்ற நாளிலிருந்து 10 வருட காலத்திற்குள் வீட்டு அலகின் உரிமையானது மூன்றாம் தரப்பினருக்கு மாற்றப்படாது.
- பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, வாழ்க்கைத் துணைவர்கள் இருவரின் பெயரிலும் மற்றும் கணவன் இறந்திருப்பின், மனைவியின் பெயரிலும் வீடு ஒதுக்கீடு செய்யப்படும்.

குறிப்பிட்ட காலப் பகுதியிற்கு முன்னர் மொத்த கட்டணத்தை செலுத்தும் வீட்டு உரிமையாளர்களுக்கு முழு கட்டணம் செலுத்திய நாளிலிருந்து வீட்டு அலகிற்கான உரித்து பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு உரிமை உண்டு.

வீடுகளைப் பெறும் தகுதியான குடும்பங்கள் திட்டத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு அடுக்குமாடி பராமரிப்பு நிதியம் மற்றும் மாதாந்த முகாமைத்துவ கட்டணங்களுக்கு பங்களிப்பு செய்ய வேண்டும். கொடுப்பனவு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் செலுத்தப்படல் வேண்டும். இது ஒரு தனியான கூட்டு கணக்கில் உரிய கட்டிடங்களுக்கான அடுக்குமாடி முகாமைத்துவ குழுவால் நிர்வகிக்கப்படும்.

மேலதிக வீட்டு அலகு தகுதி பெறக்கூடிய பெரிய குடும்பங்கள் தங்கள் கோரிக்கையை திட்டப் பணிப்பாளர், பணிப்பாளர்- காணி மற்றும் பணிப்பாளர் - சட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய விசேட மேன்முறையீட்டு குழுவிற்கு முன்வைத்தல் வேண்டும். தரைப் பகுதியின் விஸ்தீரணம், அதன் அமைப்பு (நியமம்) மற்றும் ஆக்கிரமித்து பயன்படுத்துகின்ற நிலத்தின் விஸ்தீரணம் என்பவற்றை கருத்தில் கொண்டு விசேட மேன்முறையீட்டு குழு தீர்மானிக்க முடியும். தகுதி பெறும் அந்த வீடுகளுக்கு மேலதிகமான வீடு ஒதுக்கீடு செய்யப்படும், மேலும் அவை தற்போதுள்ள கொடுப்பனவு திட்டத்தின் கீழ் வரும்.

### (ஆ) வாழ்வாதார இழப்பு

இந்த இழப்பீட்டு ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக கொள்கையின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நியமம் 2 கட்டாய குடியமர்த்தல் தளத்திற்கு இணங்க, குடியமர்த்தல்த்திற்கு முன்னரான மற்றும் பிந்தைய உதவிகளுக்கு திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிமை உண்டு. இது அவர்களின் வாழ்வாதாரத்தை திட்டத்திற்கு முன்னரான நிலைக்கு மேம்படுத்துதல் அல்லது குறைந்தபட்சம் மீளமைப்பு செய்வதனை இலக்காக கொண்டுள்ளது. புதிய குடியிருப்புக்கள் மற்றும் நிதி இழப்பீடுகளை வழங்குவதற்கு மேலதிகமாக,பாதிக்கப்படக்கூடிய திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் வருமான மீட்டமைப்பு உதவி மற்றும் புனர்வாழ்வு உதவிகள் மேற்கொள்ளப்படும். கணக்கெடுப்பு, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள், இலக்கு குழு கலந்துரையாடல்கள் மற்றும் சமூகமட்ட கூட்டங்கள் உள்ளிட்ட தொடர்ச்சியான தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட விரிவான உதவி திட்டத்தினை பின்வரும் அட்டவணைகள் விவரிக்கின்றன.

### எதிர்பார்க்கப்பட்ட வாழ்வாதார இழப்புக்கள்

கணக்கெடுப்பில் 05 குடும்பங்கள் நடத்தும் சிறிய வணிகங்கள் எதிர்மறையாக பாதிக்கப்படக்கூடும் என்று தெரியவந்துள்ளது. அவர்களிற்கு இடமாற்றத்தின் போதான வருமான இழப்பிற்கு நட்டஈடு வழங்கப்படும் மேலும் புதிய வளாகத்தில் மானிய வாடகையில் புதிய வணிக இடம் வழங்கப்படும். இணைப்பு 01 இல் உள்ள உரித்து தாயம் தகுதியான இழப்பீடுகளின் பொழிப்பினை வழங்குகின்றது.

இந்த நியமமான நிகழ்வுக்கு மேலதிகமாக, அவர்களின் வாழ்வாதாரங்களை இழப்பதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ள திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்களின் உண்மையான தேவைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டிய மேலதிக உதவி வழங்கப்படும். திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் பல்வேறு சாத்தியமான தேவைகளுக்கு ஏற்ப,திட்ட முகாமைத்துவ பிரிவு வாழ்வாதார மறுசீரமைப்பு உதவிக்கான வசதிப்படுத்தல் வகிபாகத்தை மேற்கொள்ளும்.

இந்த வகிபாகம் தகவல், பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் நுண் நிதி நிறுவனங்கள் போன்றவற்றில் சமனான அணுகல் வழங்குவதை உட்படுத்துகிறது.

## சமனான அணுகல்

அபிவிருத்தியால் தூண்டப்பட்ட குடியமர்த்தல்த்தின் பாதிப்புக்கள் பெண்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் போன்ற பின்தங்கிய நிலையில் உள்ள சமூகத்தின் உறுப்பினர்களை சமமற்ற விதத்தில் பாதிக்கின்றன. பெண்கள் தங்கள் வீட்டு நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதை சமாளிக்க ஆண்களை விட அதிக சிரமங்களை எதிர்கொள்வதால், பெண்கள் அதிக சவால்களை எதிர்கொள்கின்றனர். எனவே மீள் குடியேற்றப்படவுள்ள திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான வாழ்வாதார மறுசீரமைப்பு அணுகுமுறையானது திட்டமிடல் கட்டத்தில் பாலினத்தை கவனத்தில் கொள்ளாமல் அதன் இலக்குகளை நிலைபேறாக அடைய முடியாது. வாழ்வாதார மறுசீரமைப்பு பெண்கள் மற்றும் ஆண்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் இரண்டினதும் வாழ்வாதார நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது, ஏனெனில் அவை பல சாத்தியமான நன்மைகளையும் பாதிப்புக்களையும் விளைவிக்கும் என கருதப்படுகின்றன.

## வாழ்வாதார அபிவிருத்தி

வாழ்வாதார மறுசீரமைப்பிற்கு மேலதிகமாக,குடியமர்த்தல் கொள்ளை கட்டமைப்பிற்கு அமைவாக, அவர்களின் பொருளாதார தரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும் நோக்கில் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களினிடையே வாழ்வாதார மேம்பாட்டிற்கு திட்ட முகாமைத்துவ பிரிவு) பயிற்சி மற்றும் தேவையான பிற உதவிகளையும் வழங்கும். வாழ்வாதார மறுசீரமைப்பு குடியமர்த்தல்த்தால் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களை மீண்டும் உயிர்ப்பிப்பதை நோக்கமாக கொண்டுள்ள அதேவேளை, வாழ்வாதார அபிவிருத்தியின் நோக்கம் தற்போதுள்ள பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவது அல்லது தகுதியான திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள்)திய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை தொடங்க ஊக்குவிப்பதாகும், வாழ்வாதார மேம்பாட்டு உதவியுடன்,முன்னர் ஒரு வருமான மூலத்தில் தங்கியிருந்த குடும்பங்கள் தங்கள் குடும்பங்களுக்கு துணை வருமான மார்க்கங்களை உருவாக்கலாம். மேலும், வாழ்வாதார மேம்பாடு மற்றும் அதிக கொள்வனவு இயலுமை ஆகியவற்றை கொண்டு,திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் குறிப்பாக பெண்கள் அத்தயாவசிய வீட்டு பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும். இது அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளின் வசதி மற்றும் செயல்திறன் இரண்டையும் அதிகரிக்கக் கூடும். கல்வி, தொழில்முறை பயிற்சி, வயது, பாலினம், தற்போதைய பொருளாதார நிலை, இணைந்து பணியாற்ற விருப்பம் போன்றவற்றைப் பொறுத்து வாழ்வாதார மேம்பாட்டு உதவி ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கு மாறுபடலாம். திட்டக் குழு தேவைகள் மதிப்பீடுகளை மேற்கொண்டு,திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அவர்களுக்கு உதவுவதற்கு திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பயிற்றுவிப்பதற்கான சாத்தியமான வாய்ப்புக்களை அடையாளம் கண்டுள்ளது. 318 பகுதியில் உள்ள மக்களுக்கு சாத்தியமான பொருத்தமான வாழ்வாதார வாய்ப்புக்களாக உணவு பதனிடல், உணவு பொதியிடல், ஆடை தயாரித்தல், வாகனம் ஒட்டுதல், நிலம் அகழ்வில் ஈடுபடுகின்ற இயந்திர பணிகள், கட்டுமான துறையில் பணி புரிதல், மற்றும் அடிப்படை தொழில்நுட்பம் போன்றவை அடையாளம் காணப்பட்டுள்ளன. கொழும்பில் இத்தகைய பயிற்சிகளை வழங்குகின்ற நிறுவனங்களின் அமைவிடங்கள் கீழே தரப்பட்டுள்ளது. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கு உதவியாக நியாயமான எண்ணிக்கையிலான பயிற்சிகளை ஒழுங்கமைக்கவும் நிதியளிக்கவும் இந்த திட்டம் ஒரு நல்ல நம்பிக்கை முயற்சியை மேற்கொள்ளும். அந்த வகையில்:

வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான இத்தகைய முதலீடுகள் பெரும் இலாபங்களை ஈட்டும் என பார்க்கப்படுவதில்லை, ஆனால் நடைமுறையில் குடும்ப வருமானத்தை பின்வரும் வகையில் ஈடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது:

- குழந்தைகளின் கல்விக்கு நிதியளித்தல் (குறிப்பாக தனியார் கல்வி கட்டணங்கள்)
- குடும்ப உணவுகளில் போசாக்கின் அளவை அதிகரித்தல்.
- எந்தவொரு கடனையும் திருப்பி செலுத்துதல் மற்றும் தனியார் கடன் வழங்குனர்களில் தங்கியிருப்பதை குறைத்தல்.
- அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதில் அவர்களின் அன்றாட வாழ்க்கையில் நிட்சயமற்ற தன்மையை குறைத்தல்.

**தொழிற் பயிற்சிகள்**

- தொழில் பயிற்சி அதிகார சபை
- மூன்றாம் நிலைக் கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழு
- அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திறன்கள்
- திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- திறன் அபிவிருத்தி நிதியம்
- தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
- இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்பம் பயிற்சி நிறுவனம்
- விதாதா நிகழ்ச்சித்திட்டம்

**எழுத்தறிவு பயிற்சிகள்**

- இலங்கை மன்றக் கல்லூரி
- விசேட கல்விக்கான கொழும்பு மையம்
- சுய தொழில் மற்றும் நலன்புரிக் கழகம்

**வணிகப் பயிற்சிகள்**

- அபிவிருத்தி இலங்கை நிர்வாக நிறுவனம்
- தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை
- சேவாலங்கா நிறுவனம்
- சர்வோதய பொருளாதார தொழில்முயற்சி அபிவிருத்தி சேவைகள் (சீட்ஸ்)
- அர்த்தச்சார்யா நிறுவனம்
- கமத்தொழில் அமைச்சு - ஹெல போயுன் ;திட்டம்
- சர்வோதய சீட்ஸ், சசை

*glk; 08 – rhj;jpakhd tho;thjhu gapw;rp toq;Fdh;fs; gw;wpa nghopg;G*

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இந்த பொருளாதார நடவடிக்கைகள் கணவன் - மனைவி இருவராலும் கூட்டாக நடத்தப்படும் என எதிர்பார்க்கப்டுகிறது. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை பொறுத்தவரை, வயது வந்த பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் உட்பட பிற குடும்ப உறுப்பினர்களால் பெண்களுக்கு உதவிகள் வழங்கப்படமுடியும். எனவே, இந்த பொருளாதார நடவடிக்கைகள் தனிப்பட்ட பெண்களின் தனிமைப்படுத்தப்பட்ட நிறுவனங்களாக இருக்கக்கூடாது. மாறாக, அவை கூட்டு வீட்டு தொழில் முயற்சிகளாக இருக்கலாம். இலங்கையில் இதே போன்ற தலையீடுகளின் அடிப்படையில், சில நிறுவனங்கள் பாலினத்தின் அடிப்படையில் வேறுபடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடைக்கு தேவையான பொருட்களை மொத்த விற்பனை நிலையத்தில் இருந்து ஆண்கள் வாங்கி வந்து பெண்கள் நடத்தும் சில்லறை பல்பொருள் விற்பனை நிலையங்களுக்;கான சந்தர்ப்பங்களும் இருக்கலாம். இந்த வாழ்வாதார நடவடிக்கைகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாருக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வுகள் பரிமாற்றிக் கொள்ளப்படும்; என்று ஒட்டுமொத்தமாக எதிர்பார்க்கப்படுகிறது.

வணிகங்களுக்கான உதவிகளைத் தவிர,குடியமர்த்தல் கொள்ளை கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, புதிய அடுக்குமாடி கட்டிடங்களின் செயல்பாட்டிலும் பராமரிப்பிலும் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரும் பங்கேற்க வாய்ப்புக்கள் விளம்பரப்படுத்தப்படும். குடியமர்த்தல்த்திற்கு பின்னரான செயற்பாடுகளுக்கு உதவுவதற்காகதிட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்தலானது புதிய அடுக்குமாடி வளாகம் அவர்களுக்கு உரித்தானது என்ற உணர்வை அவர்கள் மத்தியில் வளர்த்துக் கொள்ளும் என்று திட்டக்குழு அங்கீகரிக்கின்றது.

பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் மற்றும் ஊனமுற்ற திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் இலங்கை அரசிடம் இருந்து தொடர்ந்து சமூக உதவியை பெறுவதை உறுதி செய்வதற்குத் தேவையான வசதிகளை திட்ட பணியாளர்கள் மேற்கொள்வார்கள். இதுவரை பதிவு செய்யப்படாதவர்கள் தொடர்படைய சேவைகளுக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஊனமுற்ற திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்கள் எந்த மாடியில் குடியமர்த்தப்படுவார்கள் என்பதை தெரிவு செய்;ய வாய்ப்பு வழங்கப்படும்.

### தகவலுக்கான அணுகல்

திட்ட பணியாளர்கள் பொருத்தமான மற்றும் சரியான நேரத்தில் தகவல், தொடர்புகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புக்கள் தொடர்பான பொதுவான விழிப்புணர்வு என்பவற்றை சேகரித்து வழங்குவதை மேற்கொள்ளும். இது அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கும். மேலும், திட்டத்தில் வேலைவாய்ப்புக்கள் இருப்பின்,அது தொடர்பில் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அறிவிக்கப்படும்.

### நுண் நிதி நிறுவனங்களுக்கான அணுகல்

திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் புதிய அடுக்குமாடி குடியிருப்புக்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்துதல் அவர்களின் பாதீட்டினை மறுசீரமைப்பதை தேவைப்படுத்துகிறது. தொழில் மற்றும் வணிக பயிற்சி வாய்ப்புக்கள் ஆரம்ப மூலதனம் தேவைப்படக்கூடிய வருமானத்தை ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதே. சம்பளக் கடன்களின் பெருக்கத்தின் அபாயத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்தத் திட்டம் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களை நன்மதிப்புமிக்க மற்றும் நம்பகமான நுண்நிதி வழங்குனர்களான சமுர்த்தி வங்கி மற்றும் சனச போன்றவற்றுடன் தொடர்புபடுத்தும். இது முக்கியமாக பெண்களை ஒழுங்கமைப்பதன் மூலம் சேமிப்பு மற்றும் நுண்நிதி குழுமத்தினை நிறுவுகிறது. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் சனச குழுமத்திடமிருந்து நியாயமான வீதத்தில் கடன்களை பெற்று சேமிக்க முடியும். நிரந்தரமாக

ஒபசேகரபுரா வீதியில் இருந்து இந்த திட்டத்தின் கீழ் முன்னர் குடியமர்த்தல்ப்பட்ட சமூகத்திற்கு வீட்டு சேமிப்பு குழுக்களை உருவாக்குவதற்கான பயிற்சியும் உதவியும் வழங்கப்பட்டது, பின்னர் இது சனசவுடன் தொடர்புபடுத்தப்பட்டது. சேமிப்பு குழுக்கள் அவசரகால நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான முக்கியமான இட வாய்ப்பாக செயல்படுகின்றன. பொதுவாக, அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்களில் நுண்நிதி கடன் வசதிகள் குறைவாகவே உள்ளன. எனவே இந்த குழுக்கள் வணிக வங்கிகளிடமிருந்து கடன்களை அணுகுவதற்கு போதுமான பிணையை கொண்டிராத ஏழை பெண்களுக்கு இலகுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கடன் மார்க்கத்தினை வழங்கியுள்ளன. வங்கிகள் பின்பற்றிய செயல்முறைக்கு மாறாக, கடன் வாங்கியவரின் திரட்டப்பட்ட சேமிப்பு அல்லது கடன் வாங்கியவருக்கு சொந்தமான சொத்துக்கள் கடன் வழங்கும் செயன்முறையில் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

# 5 பங்குதாரர் சந்திப்பு மற்றும் தகவல் வெளிப்படுத்தல்



படம் 09: 12.10.2018 அன்று 318தோட்டத்தில் பங்குதாரர் கலந்துரையாடல்



318, தோட்டப்பியில் கலந்து பேசுதல் செயன்முறையின் ஆவணங்கள் உட்பட வரைபு குடியமர்த்தல் திட்டத்தின் வெளிப்படுத்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரியான நேரத்தில், அணுகக்கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், அதன் முக்கிய கூறுகள் மற்றும் - உரித்து தாயம் மற்றும்குறை தீர்க்கும் பொறிமுறை ஆகியவை பகிரங்கமாகவும் மற்றும் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுடனும் தனிப்பட்ட சந்திப்புக்களில் விரிவாக விளக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் சமூக கொள்கை மற்றும் குடியமர்த்தல் கொள்ளை கட்டமைப்பின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, வெளிப்படுத்தல் காலத்தில் பெறப்பட்ட பகிரங்க மற்றும் தனியான கருத்துக்கள் மற்றும் பங்குதாரர் ஈடுபாடு ஆகியவை குடியமர்த்தல் திட்டத்தின் ஆரம்ப மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேபோல், இந்த இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பு மூன்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, பௌதீக ரீதியாகவும், இலத்திரனியல் ரீதியாகவும் கிடைக்கக்கூடியதாக இருக்கும் (தளத்தில்,நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி போன்றவற்றின் வலைத்தளம்) மற்றும்

திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுடன், விவாதிக்கப்படும். கொவிட் -19 இன் தாக்கங்கள் மற்றும் சமூக இடைவெளியின் தேவை காரணமாக திட்ட முகாமைத்துவ பிரிவின் தொடர்பு அணுகுமுறை மாற்றியமைக்கபட வேண்டியிருக்கலாம்.

*ml;ltiz 17: gq;Fjhuh; re;jpg;G kw;Wk; jfty; ntspg;ghl;bd; NghJ ngwg;gl;l fUj;Jf;fs; gw;wpa nghopg;G*

| திகதி | சந்திப்பின் வகை | பங்கேற்பாளர்கள் | தோற்றுவிக்கப்பட்ட பிரச்சனைகள், கலந்துரையாடல் விடயங்கள் | திட்டக் குழுவால் வழங்கப்பட்ட கருத்துக்கள் |
|---|---|---|---|---|
| 12 ஒக்டோபர் 2018 | 318, தோட்டயில் பொதுக்கூட்டம் | 53 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள் (39 பெண்கள் மற்றும் 14 ஆண்கள் | 1. அடுக்குமாடி குடியிருப்பில் வாழ்க்கைத்தரம் தொடர்பான பிரச்சனைகள்.<br>2. ஏற்கனவே உள்ள சமூகத்துடன் குடியேறுவதில் உள்ள சவால்கள்.<br>3. மிகியெய சேவனவில உள்ள் சிறிய குற்றங்கள் சுற்றியுள்ள பகுதிகளின் தன்மை தொடர்பான பிரச்சனைகள்.<br>4. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் நிதி பங்களிப்பு இயலுமை.<br>5. புதிய அடுக்குமாடி கட்டிடங்களின் கட்டுமான பணிகள் நிறைவடைந்ததும், 318, தோட்ட பகுதியிற்கு திரும்புவதற்கான சாத்தியம்.<br>6. மேலதிக வீட்டு அலகுக்கான கோரிக்கைகள்.<br>7. தற்போதுள்ள பெரிய கட்டமைப்புக்களுக்கு வீடு ஒதுக்கீடு தொடர்பான பொதுவான கவலை.<br>8. ஆதன உடமையாளர் இல்லாத வாடகை குடியிருப்பாளன் மீதான மீள்குடியேற்றத்தின் பாதிப்பு.<br>9. பிற மாற்று மீள்குடியேற்ற இடங்கள் எவை? | ,2 ௹3. தோற்றுவிக்கப்பட்ட பிரச்சனைகள் தீர்ப்பதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தம் பிரச்சாரங்கள் செயல்படுத்தப்படும்.<br>4.திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு புதிய குடியிருப்புக்கள் மானியமாக வழங்கப்படுவது அருகிலுள்ள சந்தை வாடகை மற்றும் ஆதனங்களின் விலையுடன் ஆய்வு செய்யப்பட்டு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது .<br>5. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாத வாடகை கொடுப்பனவு வழங்கப்படலாம், மேலும் அவர்கள் கட்டுமானம் நிறைவடைந்ததும் 318 பகுதிக்கு திரும்ப முடியும்.<br>6 ௹ 7 மேலதிக வீட்டு அலகுகளுக்கான கோரிக்கை தொடர்பான நடைமுறையானது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>8. நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் (ருனுயு) கேள்வி வினவப்படும்.<br>9. மாற்று இடங்கள் தெமட்டகொட அல்லது மாதம்பிட்டியாவில் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 24 ஒக்டோபர் 2018 | மிகியெய சேவனவில் நிரந்தர குடியிருப்பு சமூகத்துடன் பொது கூட்டம் | 26 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள் (14 ஆண்கள் மற்றும் 12 பெண்கள்) | 1. மீள்குடியேற்றத்திற்கு பிறகு மேம்பட்ட வாழ்க்கைத் தரம் பற்றிய பொதுவான கருத்து.<br>2. பாடசாலைகளின் அண்மை மற்றும் மருத்துவ வசதிகள் தொடர்பாகசிறுகவலை.<br>3. குடியிருப்பு வளாகத்தை சுற்றியுள்ள பகுதியின் பராமரிப்பு தொடர்பான பிரச்சனைகள்.<br>4. குப்பைகளை அப்புறப்படுத்தல் மற்றும் சேகரித்தல் தொடர்பான சவால்கள்.<br>5. பெரிய மற்றும் பெருகும் குடும்பங்களுக்கு கிடைக்கக்கூடிய இடத்தின் கட்டுப்பாடுகள்.<br>6. சில குடியிருப்பாளர்களிடையே போதைப்பொருள் பயன்பாடு தொடர்பான கடுமையான பிரச்சனை. | 1-4 பகிரப்பட்ட அடுக்குமாடி கட்டடத்தில் நடத்தை விதிமுறை பற்றிய புரிதலை மேம்படுத்த அதிகளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br>6. இந்த பிரச்சனை தொடர்பாக அடுக்கு மாடி நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டது.<br>இந்த இற்றைப்படுத்தலில் இணைக்கப்பட்டுள்ள பொதுவான பரிந்துரை என்னவென்றால், சமூகங்கள் ஒன்றாக மீள குடியேற வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். |
| 27.09.2019 | இடமாற்ற செயல்முறை தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 31 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள் (26 பெண்கள் மற்றும் 05 ஆண்கள்) | 1. நலன்புரி சங்கத்தின் வளர்ச்சி தொடர்பான பிரச்சனைகள்<br>2. மேலதிகமான வீட்டு அலகுகளுக்கான கோரிக்கைகள்.<br>3. புதிய சமூகத்தில் மீள்குடியேறுவது தொடர்பான பிரச்சனைகள் | 1. முழு சமூகத்திற்கும் நன்மைகளை பெறுவதற்காக நலன்புரி சங்கத்தின் வளர்ச்சியின் முக்கியத்துவம் பற்றி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.<br>2. மேலதிகமான வீட்டு அலகுகளுக்கான தகுதி, பிரமாணங்கள் பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>3. மீள்குடியேற்றம் தொடர்பான பிற தெரிவுகள்தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. |
| 03.10.2019 | மிகியெய சேவன வீட்டு திட்டத்திற்கான விஜயம். | 45 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள்; (ஆண்கள் 15 மற்றும் பெண்கள்; 30) | 1. பொது வசதிகளை பராமரித்தல். | 1. அடுக்குமாடி முகாமைத்துவ அதிகார சபை தொடர்பான சுருக்கமான விழிப்புணர்வு. |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.12.2019 | | 45 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள்; (ஆண்கள் 8, பெண்கள் 37) | 1. புதிய சமூகத்தில் மீளக்குடியேறுவது தொடர்பான பிரச்சனைகள்<br>2. திட்டம் தொடர்பான தெளிவுபடுத்தல்.<br>3. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களால் தகவல் மற்றும் விண்ணப்பங்களை வழங்காமல்/ சமர்பிக்காததால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடல். | 1. மீள்குடியேற்றம் தொடர்பான பிற தெரிவுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது<br>2. திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு திட்டம் மற்றும் அதன் நன்மைகள் தொடர்பாக திட்ட பணிப்பாளர் மற்றும்நகர அபிவிருத்தி அதிகார சபையால் சுருக்கமான தெளிவுபடுத்தல்.<br>3. இடமாற்றம் செயல்முறையை தொடரவும், வீட்டு அலகுகளை ஒதுக்கவும் விவரங்களை வழங்குவதன் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு. |
| 14.01.2020 | திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இடமாற்ற செயல்முறை தொடர்பாக விழிப்புணர்வு கூட்டம் | 14திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள்; | 1. மேலதிக வீட்டு அலகுகள் தொடர்பான பிரச்சனைகள்<br>2. இடமாற்றம் தொடர்பான கருத்து வேறுபாடுகள் பற்றிய பிரச்சனைகள் | 1. தகுதி பிரமாணங்கள் பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>2. திட்ட நன்மைகள், இடமாற்ற தெரிவுகள் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.<br>3. தி;ட்டத்துடன் ஒத்துழைக்க பங்கேற்பாளர்களை ஊக்குவிக்கப்பட்டுள்ளது. |
| 18.02.2020 | சமூக குழுவால் மாதம்பிட்டியாவில் இடமாற்றம் யெல்முறைக்கு பிரதிபலிக்காத குழுவினருக்கான விசேட கூட்டம் | 05 திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள்; | 1. மேலதிக் வீட்டு அலகுகள் தொடர்பான பிரச்சனைகள்<br>2. பாதுகாப்பு நடைமுறை பிரச்சனைகள் | 1. தகுதி பிரமாணங்கள் பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>2. சி.சி.ரி.வி தொடர்பான பாதுகாப்பு முறைமை தொடர்பில் தகவல் வழங்கப்பட்டுள்ளது. |
| 27.02.2020 | சமூக குழு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை பணியாளர்களினால் மாதம்பிட்டியாவில் இடமாற்ற செயல்முறைக்கு பிரதிபலிக்காத குழுவினருக்கான விசேட கூட்டம். | (ஆண்கள் 2 மற்றும் பெண்கள் 3) | 1. .ஒரு சங்கத்தை உருவாக்குவது தொடர்பான கருத்து வேறுபாடுகள் மற்றும் சமூக மக்களோடு ஒத்துழைத்தல். | 1. நலன்புரிச் சங்க உருவாக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் நலன்புரி சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. |

**அட்டவணை 18: பங்குதாரர் சந்திப்பு மற்றும் தகவல் வெளிப்படுத்தல்**

| திகதி/ காலாண்டு | சந்திப்பின் தன்மை | கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்கள் |
|---|---|---|
| 2020 02 ஆம் காலாண்டு | விழிப்புணர்வு செயலமர்வு | • மீள்குடியேற்றப்படவுள்ள திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்தல்.<br>• வாடகை கொள்வனவு ஒப்பந்தம் தொடர்பான விழிப்புணர்வு |
| 2020 03 ஆம் காலாண்டு | விழிப்புணர்வு கூட்டம் | இழப்பீட்டு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் |
| 2020 03 ஆம் காலாண்டு | செயலமர்வு | மீள்குடியேற்றத்திற்கு முந்தைய உதவி ( மாணவர்களை இடமாற்றம் செய்தல் மற்றும் இலங்கை அரசிடம் இருந்து பொருத்தமான சமூக உதவியை பெறுதல் போன்றன) பெண்களுக்கு சமமான உதவி வழங்கப்படுவதை உறுதி செய்தல். |
| 2020 03 ஆம் காலாண்டு | விழிப்புணர்வு கூட்டம் | ஏற்கனவே உள்ள சமூகத்துடன் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை ஒருங்கிணைப்பதற்கான உதவி. |
| 2020 03 ஆம் - 04 ஆம் காலாண்டு | விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | நலன்புரி சங்கங்கள் ஃ குழுக்களை உருவாக்கல் மற்றும் செயல்படுத்தல். |
| 2020 03 ஆம் - 04 ஆம் காலாண்டு | கலந்துரையாடல் | வருமான மறுசீரமைப்பு செயற்பாடுகள் |
| 2020 03 ஆம் - 04 ஆம் காலாண்டு | நிகழ்ச்சிக் கூட்டம் - 1 | அடுக்குமாடி முகாமைத்துவ குழுவின் உருவாக்கம் |
| 2020 03 ஆம் - 04 ஆம் காலாண்டு | நிகழ்ச்சிக் கூட்டம - 2 | அடுக்குமாடி முகாமைத்துவ குழுவினை கண்காணித்தல் |
| 2020 03 ஆம் - 04 ஆம் காலாண்டு | நிகழ்ச்சிக் கூட்டம் - 3 | அடுக்குமாடி முகாமைத்துவ குழுவின் முகாமைத்துவம் |
| 2020 03 ஆம் - 04 ஆம் காலாண்டு | நிகழ்ச்சிக் கூட்டம் | புதிய நிர்வாக கட்டமைப்புகளை ஏற்றுக்கொள்வது தொடர்பான பங்குதாரர் கூட்டம்- மீள்குடியேற்றம் |

## 5. மனக்குறை தீர்க்கும் பொறிமுறை

இலங்கை அரசின் இன் தேசிய கட்டாய குடியமர்த்தல்க் கொள்கை 2001,ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் கொள்கை மற்றும் திட்டத்தின்குடியமர்த்தல் கொள்ளை கட்டமைப்பு ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்க, இந்த திட்டம் அணுகக்கூடிய குறைதீர் பொறிமுறையை நிறுவியுள்ளது.இது 19.06.2019 இல் இருந்து செயல்பட்டு வருகின்றது, மேலும் அனைத்து திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் தங்கள் முறைப்பாடுகள் மற்றும் குறைகளை சமர்ப்பித்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது. குறை தீர் பொறிமுறையின் நோக்கங்கள் பின்வருமாறு:

- பிரச்சனைகளை வெளிப்படுத்தவும் சரியான நேரத்தில் தீர்வுகளை அடையவும் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஒரு சிறந்த வழியை வழங்குதல்.
- திட்டத்திற்கும் சமூகத்திற்கும் அல்லது பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் இடையே பரஸ்பர ஆக்கபூர்வமான உறவை மேம்படுத்துதல்.
- சமூக பிரச்சனைகளை முறையாக தீர்த்தல்.

மேலதிக வீடுகளுக்கான கோரிக்கைகள் ளுயுஊ ஆல் மீளாய்வு செய்யப்படுகின்றன. அதேவேளை மற்றைய எல்லா பிரச்சனைகளும் குறை தீர் பொறிமுறையின் மூலம் தீர்க்கப்படுகின்றன. முறைமை-யின் கிடைப்பனவு மற்றும் செயற்பாட்டு நடைமுறைகள் பங்குதாரர் சந்திப்பு மற்றும் பொது கருத்தறிதலின் போது பரவலாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. குறை தீர் பொறிமுறை மூன்று அடுக்கு படிமுறைகளை கொண்டுள்ளது, முறைப்பாட்டாளர்கள் முன்மொழியப்பட்ட தீர்மானம் தொடர்பில் திருப்தி அடையவில்லையெனின், இது அவர்களின் பிரச்சனைகளை மேல்முறையீடு செய்ய அனுமதிக்கறது.

- படிமுறை 1பிரச்சனைகள் களப்பணி சமூக அதிகாரிகளினால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.
- படிமுறை 11 பிரச்சனைகள் அமைச்சு மட்டத்தில் நிறுவப்பட்ட குறைதீர் குழுவால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.
- படிமுறை 111 :பிரச்சனைகள் சுயாதீன குறைதீர் குழுவால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

மனக்குறை தீர் பொறிமுறையிற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட தரப்பினர் குறைகளை தீர்ப்பதற்காக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட முரண்பாடு தீர்வுக் குழுவான மத்தியஸ்த சபையினை (சமத மண்டல) பயன்படுத்தலாம். நீதித்துறை முறையை தேர்ந்தெடுப்பதன் விளைவாக ஏற்படும் ஏதாவது செலவைத் தவிர, தீர்மானத்தை சரி செய்வது தொடர்பான எந்தவொரு கட்டணமும் முறைப்பாட்டாளருக்கு அறவிடப்படாது.

குறை தீர் பொறிமுறை என்பது இலங்கை அரசின் சட்ட முறைமைக்கான ஒரு பதிலீடு இல்லை, மேலும் எந்த நேரத்தில் ஒரு திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர் சட்ட உதவியை நாடலாம்.

திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் தங்கள் பிரச்சனைகளையும் முறைப்பாடுகளையும் பின்வரும் வழிகள் ஊடாக தாக்கல் செய்ய முடியும்:

- திட்ட ஊழியர்களின் வழமையான வருகையின் போது நேரடியாக தெரிவித்தல்.
- 0112073883 என்ற தொலைபேசி ஊடாக

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து குறைகளும் பிரச்சனைகளுக்கான தீர்வைக் காண்பதற்கும், பிரச்சனையின் வகையினை அடையாளம் காண்பதற்கும் ஒரு முதன்மை குறைதீர் பதிவேட்டில் பதியப்படுகிறது. குறைகளை பதிவிட்ட நபரின் பாலினத்தாலும், குறையின் வகை ரீதியாகவும் குறைகளை வகைப்படுத்துவதற்கு தேவையான அனைத்து கூறுகளையும் பதிவேடு உள்ளடக்குகிறது. ஒவ்வொரு முறைப்பாடுகளும் குறைந்தபட்சம் பின்வரும் தகவல்களுடன் பதிவு செய்யப்படுகின்றன :

- முறைப்பாட்டாளரின் பெயர் மற்றும் பால்
- குறை தொடர்பான விளக்கம்
- முறைப்பாட்டினை பெற்றுக்கொண்டதாக முறைப்பாட்டாளருக்கு அனுப்பிய திகதி
- மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பான விளக்கம் (விசாரணை, சீர் செய்தல் நடவடிக்கைகள்) மற்றும்
- முறைப்பாட்டாளருக்கு தீர்வு மற்றும் முடிவுறுத்தல் கருத்துக்களை வழங்கிய திகதி.

குறைகளை ஏற்றுக்கொண்டவுடன்,திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள்; ஒப்புதல் ஒன்றை பெறுகின்றனர் மற்றும் ஒட்டுமொத்த செயல்முறை, பொதுவான கால அளவு, சாத்தியமான முடிவுகள் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் தொடர்பாக முழுமையாக அறிவிக்கப்படுகிறது. குறை தீர் பொறிமுறையுடன் தொடர்புடைய எந்தவொரு செலவும் முறைப்பாட்டாளருக்கு ஏற்படுவதில்லை. இது திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களால் நன்றாக புரிந்து கொள்ளப்படுகிறது. குறைகளை பெயர் குறிப்பிடாதும் சமர்ப்பித்துக்கொள்ளப்படலாம். எனினும் இது முறைப்பாட்டாளருக்கு தனிப்பட்ட பதிலை வழங்காது. எல்லா சந்தர்ப்பங்களிலும், திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள்; முறைப்பாட்டு கடிதத்தை எழுத முடியாவிடின், திட்ட ஊழியர்கள் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் சிறந்த நலனுக்காக முறைப்பாட்டு கடிதத்தை தயார் செய்வதில் ஃ வரைவதில் / எழுதுவதில் உதவி செய்து கொள்ள முடியும்.

திட்டக்குழு முறைப்பாட்டு வகைகள் மற்றும் திரும்ப திரும்ப குறிப்பிடப்பட்ட பிரச்சனைகளை அí-டயாளம் கண்டு கொள்வதற்கு மனக்மனக்குறைகள் பதிவேட்டினை தினமும் மீளாய்வு செய்கின்றனர். இது போன்ற சூழ்நிலைகளில் முறைப்பாடுகளின் மூலத்தை சரி செய்ய ஒரு உள்ளக ரீதியாக சீர்செய்தல் நடவடிக்கை தயாரிக்கப்படுகிறது. முறைப்பாட்டு பொறிமுறையின் ஊடாக தோற்றுவிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை திட்ட முகாமைத்துவ பிரிவு தீர்க்க முடியாவிட்டால், அல்லது நடவடிக்கை தேவையில்லை என்றால், ஏன் பிரச்சனை தீர்க்கப்படவில்லை என்ற விரிவான விளக்கம் / நியாhயத்தை இது வழங்கும். முடிவு திருப்திகரமாக இல்லாவிட்டால், முறைப்பாட்டை தோற்றுவித்த நபர் ஃ அமைப்பு எவ்வாறு குறைகளை தொடர்ந்து கொண்டுசெல்லல் என்பதற்கான விளக்கமும் பதிலில் இருக்கும்.

சட்டவிரோத போதைப்பொருள் பயன்பாடு, பாலியல் வன்முறை அல்லது பாலின அடிப்படையிலான வன்முறை போன்ற சட்டவிரோத செயல்களுடன் தொடர்புடைய பிரச்சனைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கு,திட்ட முகாமைத்துவ பிரிவு நிபுணத்துவ நிறுவனங்களின் உதவியை கோருகிறது மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாக கொண்ட அணுகுமுறையை பின்பற்றும். இந்த அணுகுமுறை நடுந-pலையான முறையில் சேவைகளின் இரக்கமான மற்றும் உணர்வு பூர்வமான வழங்கலை உறுதி செய்ய பாதிக்கப்பட்டவரின் தேவைகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து முறையாக கவனம் செலுத்துவதாக வரையறுக்கப்படுகிறது. நடைமுறையில் பாதிக்கப்பட்டவரின் விருப்பம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு என்பன எல்லா விடயங்களிலும் நடைமுறைகளிலும் முன்னுரிமை பெறுகின்றது என்பதே இதன் பொருளாகும்.

**அட்டவணை 19 மனக்குறை தீர்க்கும் பொறிமுறையின் கட்டமைப்பு ,தொழிற்பாடு என்பனவற்றின் பொழிப்பு**

| படிமுறை | செயல்முறை விபரங்கள் |
|---|---|
| **KjyhtJ gbKiw**<br>**nghWg;ghd egh;;: fs gzpfspy; cjtp r%ftpayhsh;**<br>**Fiwfis epth;j;jp nra;tjw;fhd fhy msT: 15 Ntiy ehs;** | • குறை தீர் பொறிமுறை பகிரங்கமாக 318, தோட்ட பகுதியில் மற்றும் கள மட்டத்தில் அடுக்குமாடி அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.<br>• ஒவ்வொரு படிமுறையில் உள்ள தொடர்புகொள்ளும் நபரின் விவரங்கள் உட்பட நகர மீளுருவாக்கல் திட்டம் மற்றும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் வலைத்தளங்களிலும் குறை தீர் பொறிமுறை குறிப்பிடப்பட்டுள்ளது.<br>• அதிகாரிகளை நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ தொடர் கொள்வதன் மூலம் முறைசாரா முறையில் குறைகளை முறையிடலாம். குறைகளை முறைசாரா முறையில் தீர்க்க முடியாவிட்டால், பாதிக்கப்பட்ட தரப்பினர் படிமுறை 1 முறைப்பாட்டு படிவத்தில் முறைப்பாட்டினை சமர்ப்பிக்க வேண்டும். படிவத்தின் பிரதி (நகர மீளுருவாக்கல் திட்ட அலுவலக முத்திரையுடன்) பாதிக்கப்பட்டவருக்கு படிவத்தினை பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படல் வேண்டும்.<br>• முறைப்பாட்டு படிவத்தின் இலத்திரனியல் பதிப்பு நகர மீளுருவாக்கல் திட்டம் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் வலைத்தளங்களிலும் கிடைக்கக்கூடியதாக உள்ளது. படிவத்தின் அச்சுப் பிரதிகள் கள மட்டத்தில் மற்றும் திட்ட முகாமைத்துவ பிரிவு ஆகிய இரண்டு திட்ட அலுவலகங்களில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.<br>• தொடர்புடைய உதவி சமூகவியலாளர் படிக்கவோ அல்லது எழுதவோ முடியாதவர்களும் படிவத்தை நிரப்புவதற்கு உதவி செய்வார்கள்.<br>• தொடர்புடைய சமூகவியலாளர் முறைசாரா மற்றும் முறையான முறைப்பாடுகளுக்கு தனித்தனி பதிவுகளை வைத்திருப்பார் மற்றும் பெறப்பட்ட அனைத்து முறைப்பாடுகளின் பதிவுகளையும் வைத்திருப்பார்.<br>• தொடர்புடைய உதவி சமூகவியலாளர் இந்த விடயத்தை மகளிர் அபிவிருத்தி குழு மற்றும் தேவையானதாக கருதும் பிற தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்துரையாடி அவர்களிடமிருந்து கருத்துக்களை பெறுவர். அத்தகைய கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டால், திகதி, நேரம், அமைவிடம் அல்லது இடம், பங்குபற்றுனர்களின் பெயர்பட்டியல் (தொடர்பு கொள்ளும் |

| | |
|---|---|
| | விவரங்களுடன்) கலந்து பேசுதல் தொடர்பான முக்கிய முடிவுகள் பற்றிய பொழிப்பு ஆகியவை தொடர்புடைய உதவி சமூகவியலாளர் வழங்கிய எழுத்து மூலமான தீர்மானத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.<br>• 15 வேலை நாட்களுக்குள் முறைப்பாடு தீர்க்கப்பட்டால், தொடர்புடைய உதவி சமூகவியலாளர் இந்த தீர்மானத்தை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.<br>• பாதிக்கப்பட்ட தரப்பினர் முடிவினை பெற்று, 10 வேலை நாட்களுக்குள் தீர்;மானம் தொடர்பாக அவர்களின் உடன்பாடு அல்லது உடன்பாடின்மையினை சமர்ப்பித்தல் வேண்டும். இந்த காலப் பகுதியினுள் பாதிக்கப்பட்ட தரப்பினரால் எந்த பதிலும் சமர்ப்பிக்கப்படாவிட்டால், தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும்.<br>• ஒரு முறைப்பாட்டை தீர்ப்பதற்கு அதிக காலம் தேவைப்பட்டால், இந்த கோரிக்கை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட வேண்டும். கால நீடிப்பு நடைமுறைக்கு வருவதற்கான கோரிக்கையை பாதிப்புக்குள்ளான தரப்பினர் ஏற்றுக் கொண்டு கை-யொப்பமிட வேண்டும். கால நீடிப்பானது மேலதிகமாக 15 வேலை நாட்களுக்கு நீடிப்பு செய்யப்படலாம். |
